# இலக்கு

உள்நாட்டு யுத்தத்தை விடுதலைப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்ல சிறந்த இராணுவத் திட்டம் மட்டும் போதாது. ஒரு யுத்தகால சுயசார்புப் பொருளாதாரத் திட்டமும் வேண்டும். மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்ல வழிகள் பற்றி இயக்கங்கள் சிந்தித்துச் செயலாற்ருதபட்சத்தில், தமிழ் சமூகத்தின் குட்டி முதலாளித்துவ அம்சங்கள் மேலோங்கி, விடுதலைப் போராட்டத்திற்கு உள்ளார்ந்த எதிர்ப்பு சக்திகள் வளரக்கூடிய ஆபத்தை நாம் குறைத்துமதிப்பிட முடியாது. ஆகக் குறைந்தபட்சம் உணவு உற்பத்தி, பங்கீடு பற்றிய ஒரு யுத்தகால சுயசார்புத் திட்டம் உடனடியாக வகுக்கப்பட்டு அமுலாக்கப்படுதல் அவசியம். விடுதலை இயக்கங்களின தலைமையில் உணவு அடிப்படை பரந்த அளவில் ஸ்திரமாக்கப்பட்டால் விடுதலைப் போரின் பரந்த வெகுஜன அடிப்படையை எதிரி உருக்குலைப்பது கஷ்டம்.

ஆகவே இராணுவத் திட்டம் — யுத்தகால பொருளாதார சுயசார்புத் திட்டம்—வெகுஜன அணிதிரட்டலுக்கான புரட்சிகர கலாச்சாரத் திட்டம், இவை மூன்றையும் ஒன்றிணைத்து தன் கட்டுப்பாட்டில் வழி நடத்தவல்ல அரசியலே, விடுதலை அரசியலாகும்.

சுவடு — 4
கார்த்திகை — மார்கழி, 1984
அன்பளிப்பு — 3/50

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படைக்கு வெற்றி கொள்ளப்பட முடியாத உணர்வு உண்டு. அது எல்லா எதிரிகளையும் தோற்கடிக்குமே தவிர ஒருபோதும் எதிரிக்கு அடிபணிய மாட்டாது. எந்தவித கஷ்டங்கள் தொல்லைகள் நேர்ந்தாலும் பரவாயில்லை; கடைசி ஒரு மனிதன் இருக்கும் வரையில், அவன் போராடியே தீருவான்.

## இலக்கு வாசக நண்பர்களுக்கு

இந்நான்கு இதழ்களையும் பல்வேறு தடைகளையும் நெருக்கடிகளையும் தாண்டியே வெளிக்கொண்டு வந்திருக்கிறோம். இவ்வருடம் ஆறு இதழ்கள் வெளிவர வேண்டியிருந்தும் நான்கு இதழ்கள் மட்டுமே வெளிவந்ததிற்கு முக்கியதொரு காரணம் பொருளாதார நெருக்கடியே. எனவே இவ்விதழிலும் எமது பொருளாதார நெருக்கடி பற்றி 'இலக்கு' வாசகநண்பர்களுக்கு கொஞ்சம் சொல்ல வேண்டியுள்ளது. ஏற்கனவே நாம் இரண்டாவது இதழிலும் எமக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தும், எமது வாசக நண்பர்கள் உதாசீனமாக இருந்தது எமக்கு வேதனையைக் கொடுத்தது. ஒவ்வொரு இதழ் வெளிவந்தபோதும் பலர் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்ட போதிலும், இதழ்களை இலவசமாக பெற்றுப் படிப்பதிலேயே அதிக அக்கறையாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. சில இயக்கங்கள் இலவசமாக தமது வெளியீடுகளை விநியோகிப்பதால் அந்த அடிப்படையிலேயே எம்மையும் எதிர்பார்க்கிறார்கள். உங்களுக்கு இலவசமாக வழங்குவது எமக்கும் விருப்பம்தான். ஆனால் எமது விருப்பம் யதார்த்தத்திற்கு இசைவாக அமைவதில்லையே. மன்னிக்கவும், இன்றைய நிலையில் எம்மால் இலவசமாக வழங்க முடியாதுள்ளதென்பதை வாசக நண்பர்கள் உணர்ந்து கொள்ளவும்.

வாசக நண்பர்களே! 'இலக்கு'இற்கு தாராள மனதுடன் நிதியுதவி வழங்கவும். எதிர்வரும் 1985ஆம் ஆண்டிலிருந்து 'இலக்கு' மாதமொரு தடவை வெளிவருவது உங்கள் கரங்களிலேயே தங்கியுள்ளது. எமது நிலையையுணர்ந்து எமது வேண்டுகோளிற்கு செவி சாய்ப்பீர் என்ற நம்பிக்கையுடன் புதுவருட வாழ்த்துக் கூறி வாசக நண்பர்களிடமிருந்து விடைபெறுகிறோம்.

தோழமையுடன்

**ஆசிரியர் குழு**

## தமிழீழ மக்களுக்கு

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பொதுவானதொரு வேலைத் திட்டத்தின் அடிப்படையில், ஐக்கிய முன்னணி அமைத்து செயற்படும் நோக்கில் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்திக் கொண்டிருக்கிறோம். நாம் இதுவரைக்கும் எந்தவொரு விடுதலை இயக்கத்துடனும் ஐக்கிய முன்னணிக்கான இணக்கத்திற்கோ, ஒருங்கிணைப்பிற்கோ வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் தோழமை, பரஸ்பர உதவி என்ற அடிப்படையிலேயே உறவைப் பேணி வந்துள்ளோம்.

—தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கு

## இது இலக்கு நான்காவது இதழ்

இலக்கு முதலாவது இதழிலேயே நாம் தெளிவாக குறிப்பிட்டிருந்தோம், "மக்கள் போராட்டத்திற்கு மக்களைத் தயார்ப் படுத்து கின்ற சிரமம் மிக்க பணியில் இலக்கு எந்த விதமான தவறான கருத்துப் போக்குகட்கு எதிராகவும், திசை விலகல்கட்கு எதிராகவும், சமரசப் பின்னடைவுகட்கு எதிராகவும், உக்கிரமான போராட்டத்தை தொடுக்க தயங்க மாட்டாது'' என்ற சுய முன்னறிவிப்புடன் இலக்கு முதலாவது இதழ் வெளி வந்தது இந்த ஆண்டில் இத்துடன் நான்கு இதழ்களே வெளிவந்துள்ளன. நடைமுறையில் உள்ள சிக்கல்களும், கஸ்டங்களும் மக்கள் அறியாத விஷயமல்ல. ஆயினும் கூடியளவு ஒழுங்காகவும் அதிகமாகவும் எமது இதழ்களை கொண்டு வருவதில் நாம் மறு ஆண்டிலிருந்து ஊக்கமாக செயல்படுவோம்.

இலக்கு மூன்று இதழ்களே இதுவரை வெளி வந்த போதிலும் இந்த மூன்று இதழ்களிலும் ஓரளவுக்காவது தனது அரசியல் கருத்துக்களை பரவலாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது. எமது ஒவ்வொரு இதழும் ஒன்றை விட மற்றையது சிறப்பாக வெளிவருவதற்கு எமது மக்கள் எமக்களித்த விமர்சன ஆதரவும் இதர ஆதரவுகளுமே காரணம். தொடர்ந்தும் எமது இதழ்களை எந்தவிதமான பாகுபாடு மின்றி கறாராக விமர்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். விமர்சனமே எங்கள் பலம் விமர்சனத்தினூடாகவே நாம் எம்மை வளர்த்துக் கொள்ளவும், இலக்கு தனது பாதையில் உறுதியாக போராட்டத்தை முன் னெடுத்து செல்லவும் சாத்தியமாகும்.

எமது முதலாவது இதழில் கடினமான வசன நடை இருப்பதாக நாம் விமர்சிக்கப்பட்டோம். எளிமைப்படுத்த முயற்சி எடுத்தோம். மக்கள் மொழியில், அவர்கள் இலகுவாக விளங்கும் மொழியில் பேச இலக்கு தீவிரமாக உழைக்கும். அதன் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படும்போது அதை எப்போதும் திருத்திக்கொள்ள இலக்கு தயாராக உள்ளது.

கெரில்லாப் போராட்டம் பற்றிய எமது 3வது இலக்கில் வந்த அரசியல் குறிப்பிலுள்ள விடயம் பலரை குழப்பிவிட்டுள்ளது. குழப்பங்களை தவிர்த்து எழுதுவது எமது கடமையாகும். ஆயினும் குழப்பம் சரியானதா என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள முயல்வதும் அவசியமாகும். நகர்ப்புற கெரில்லாப் பாணியிலான தாக்குதலை நாம் பாராட்டுவதாக எண்ணிய பலர் அதில் குறிப்பிட்ட விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். அது வெறுமனே தாக்குதல் வடிவம் பற்றியதே அன்றி, இன்றைய சூழலில் அது சரியா பிழையா என்ற கேள்விக்கான பதில் அல்ல.

---

**வெகுஜனத் தொடர்பு என்பது**
**வெடிகுண்டுகளைக் காட்டிலும் வலிமையானது.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தாக்குதல், புரட்சிகர மக்கள் இயக்கமொன்றின் வழிகாட்டலில் செய்யப்பட வேண்டியது பரந்துபட்ட மக்களின் ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியை இலக்காக கொண்டு நடத்தப்படும் தாக்குதல்களே சரியான தாக்குதல்களாகும். அதாவது மக்கள் புரட்சிக்கு தயார் செய்யப்பட்ட நிலையில் ஆயுதபாணியாகி கெரில்லா தாக்குதலை நடாத்துவதே அதுவாகும். மக்கள் ஸ்தாபன ரீதியில் அணி திரட்டப்படாது, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுக்கிறநோக்கில் அமையாத போராட்டம், அது எத்தனை சிறப்பானதாயினும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததே. இதனையே இலக்கு குறிப்பிட்டு வந்துள்ளது!

இலக்கு சில நடைமுறை அவசியங்களை முன்னிட்டுத்தான் சுயமான தனது கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளது. ஆனால் அது தான் சார்ந்துள்ள இயக்கம் எது என குறிப்பிடாததால் அதை தமது என சில இயக்கத் தோழர்கள் உரிமை கோரியுள்ளார்கள். இது பற்றி நாம் அதிகம் அக்கறைப்படவில்லை. ஏனெனில் இலக்குக்கு உரிமை கோருவது என்பது அதன் கருத்துகளுக்கு உரிமை கோருவதாகும். அது ஒரு நல்ல அம்சமே; அது முக்கியமான அம்சமும்கூட. ஆயினும் இலக்கு தான் சார்ந்துள்ள விடுதலை இயக்கத்தை குறிப்பிட வேண்டியது அவசியமென நினைக்கிறது. இது வரக்கூடிய பலவித குழப்பங்களையும் தீர்க்க உதவியாக இருக்கும்.

தமிழ் மக்கள் மத்தியில், புரட்சிகரமான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதிலும், தேசிய விடுதலைப் போராட்டத்தை பரந்துபட்ட முழு மக்களின் ஜனநாயக விடுதலைக்கான போராட்டமாக முன்னெடுப்பதிலும் தீவிரமாக உழைத்து வரும் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' (N.L.F.T.)யின் அரசியல் சித்தாந்த நடைமுறை பிரச்சார ஏடாகவே இலக்கு வெளிவருகிறது; வெளிவரும். தேசிய விடுதலைக்கான முழுமையான ஈடுபாட்டுடன் புரட்சிகர, மக்கள் யுத்தத்திற்கான தயாரிப்பில் பரந்துபட்ட மக்களை பாட்டாளி வர்க்க தலைமையில் அணி திரட்டுவதில் இலக்கு தொடர்ந்து செயல்படும் என உறுதி கூறுகின்றது. ●

---

" ................................

..................................

கண் விழித்திருப்போம்
நண்பர்களே!

சோகம் படர்ந்த
தேசப் படமும்,
இதுவரை காலம்
சிந்திய இரத்தமும்,
இதுவரைகால
இழுப்பும்,
நெருப்பும்,
எரியும் மனமும்

இன்னொருவனுக்கு அடிமையாகவா?

இரவல் படையில்
புரட்சி எதற்கு?
எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்

வெல்வோமாயினும் வாழ்வோம்;
வீழ்வோமாயினும் வாழ்வோம்!
நமது பரம்பரை
போர் புரியட்டும்"

—சேரன்

● ●

நமது ஆறுகள்
நமது மலைகள்
நமது மக்கள்
என்றும் ஜீவித்திருப்பார்கள்
அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள்
வீழ்த்தப்பட்டவுடன்
இதனினும் பத்துமடங்கு அழகான
இனிய தேசத்தை நாம் கட்டுவோம்

—ஹோசிமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாதையில் பயணம் தொடர்வோம்

1983 ஜூலைக் கலவரம் முடிந்து ஒன்றரை ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இக் கலவரத்தின் பின்னர் தமிழீழப் போராட்டத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. சில இயக்கங்கள் ஒரு சில மாதங்களில் தாம் அந்நிய உதவியுடன் பாரிய தாக்குதல்கள் நடத்தி எதிரியை விரட்டியடித்து தமிழ் ஈழம் அமைப்பதாக மக்களுக்கு நம்பிக்கையூட்டின. இதனை நம்பிய பெரும்பான்மையான மக்களும் இரட்சகரின் வரவை எதிர்பார்த்து நாட்களை எண்ணியபடி தமது பணி மறந்து பார்வையாளர்களாக காலத்தை கடத்தி வந்தனர்; வருகின்றார்கள். மக்கள் ஏன் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டாலே எமது போராட்டத்தின் இன்றைய காலகட்டத் தேவையைப் புரிந்து சரியான திசை வழியில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையானது யூ. என். பி. அரசு பதவிக்கு வந்ததிலிருந்து அதிகரித்தே வந்துள்ளது. இன்று மொசாட்டின் வழிகாட்டலில் முழு அளவிலான இன அழித்தொழிப்பிலேயே இனவெறி அரசு இறங்கியுள்ளது. இந்நிலைமைகளை உணர்ந்து மக்களை அரசியல் மயப்படுத்தி, ஸ்தாபன வடிவில் கொண்டு வந்திருந்தால் காலத்தின் தேவை கருதி சிறு சிறு போராட்டங்களின் மூலம் எமது போராட்டம் உண்மையான மக்கள் போராட்டமாக வளர்ச்சி பெற்றிருக்கும். இவ்விதம் மக்களை, நாளாந்த சிறு சிறு போராட்டங்களில் ஈடுபடுத்தப் படுவதன் மூலமே அவர்களது போர்க் குணம்சம் வளர்க்கப் படுவதுடன் படிப்படியாக அமைப்பு வடிவிலும் கொண்டு வரப்பட்டிருக்க முடியும். எமது போராட்டம் நீண்ட கால மக்கள் யுத்தமாகவே அமையும் என்ற வகையில் வகுக்கப் பட்ட ராணுவ நடைமுறைத் தந்திரங்களை சிறு சிறு கெரில்லா போராட்டங்களில் பரீட்சிக்கப்பட்டு படிப்பினைகள் பெற்று உண்மையான மக்கள் படையை கட்டுவதன் மூலமே பெரும் போருக்கான தயாரிப்பையும் தன்னம்பிக்கையும் உருவாக்கியிருக்க முடியும்.

ஆனல் ஜூலைக் கலவரமானது ஏற்படுத்திய புறச் சூழ்நிலையைச் சாதகமாக பாவிக்குமளவிற்கு இயக்கங்களின் ஸ்தாபன மட்டமோ, மக்களின் உணர்வு மட்டமோ (அரசியல் மட்டம்) வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இத் திடீர்ப் பாய்ச்சல் போராட்டத்திற்கு பலமான உந்து சக்தியைக் கொடுத்தது போல் ஒரு தோற்றப்பாட்டைக் கொடுத்தாலும் உண்மையில் விடுதலைப் போராட்டத்தின் சீரான சரியான வளர்ச்சிக்கு பாரிய பாதிப்பைத்தான் கொடுத்தது. அகநிலைச் சக்திகளான மக்களின் உணர்வு மட்டம் ஸ்தாபன வளர்ச்சி என்பவற்றிற்கு இசைவாக புறச் சூழ்நிலை வளர்ச்சி பெற்றிருக்குமானல் விடுதலைப் போராட்டம் சரியான திசை வழியில் சென்றிருப்பதுடன் பல வெற்றிகளையும் சாதித்திருக்கும். ஆனல் இக்கலவரம் ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன? இக்கலவரம் பல இயக்கங்களுச்கு புத்துயிர் அளித்தது. அத்துடன் எதிரியின் தாக்குதல் மோசமடைய மக்களைப் பாதுகாக்கவும், தம்மைப் பாதுகாக்கவும்வேண்டிய நிலைக்கும் இயக்கங்களைத் தள்ளியது. இந்நிலையில் சில இயக்கங்கள் மக்களிடையே வேலை செய்வதை நிறுத்திக் கொண்டன. பல வெளிச்சக்தியில் நம்பிக்கை வைத்தன. சில இயக்கங்கள் நாட்டிலிருந்து தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டன. இன்னும் சில சிறு சிறு தாக்குதல்கள் தவறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிக்கொண்டு நிரந்தரப் படையைக் கட்டி திடீர் கிரமமான யுத்தம் (நேரடி யுத்தம்) ஒன்றின்மூலம் வெற்றியைப் பெற முடியும் என்ற அடிப்படையில் கூலிப்படை தன்மையிலான நிரந்தரப் படையை கட்டும் வேலையை மேற்கொள்ளுகின்றன.

ஜூலைக் கலவரத்தின் பின் தொடர்ச்சியாக பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுகின்றனர். தீவைப்பு, நூற்றுக்கணக்கில் இளைஞர் கைது என்பன சர்வ சாதரணமான நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. இராணுவத்தினர்மீது பல தாக்குதல்கள் திறமையுடன் வெற்றிகரமாகச் செய்யப்பட்டாலும் பொது மக்களுக்கே பாரிய அழிவுகள் ஏற்பட்டன. ஏற்கனவே நாம் 'இலக்கு' முதலாவது இதழில் சுட்டிக் காட்டியபடி மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு மையப்படுத்தப்பட்ட ஸ்தாபன வழிகாட்டலில் கெரில்லா நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அது மேற்கொண்டு மக்கள் யுத்தத்திற்கு வளர்த்தெடுக்கப்படுமேயானால் இந் நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவையே. அப்படியில்லாத பட்சத்தில் அவை விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிப்பனவாகவே அமையும். இந் நடவடிக்கைகளின் தவறான அம்சத்தை மட்டும் பார்த்து நாம் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கையை நிராகரிக்கவில்லை. எமது போராட்டத்தில் நகர்ப்புறக் கெரில்லா நடவடிக்கை தவிர்க்க முடியாததும் அத்தியாவசியமானதுமான போராட்ட வடிவமென்பதை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். ஆனால் இந்நடவடிக்கைகள் சரியான நடவடிக்கைகளாக அமையாததுடன் விடுதலைப் போராட்டத்திற்கு பின்னடைவைத்தான் கொடுத்தன.

இன்றைய நிலையில் சரியான மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க மக்களுக்கு சுயசார்பில் நம்பிக்கையூட்டி, சுய பாதுகாப்பிற்காக தயாரிப்பதே உடனடித் தேவையாகும். இதைவிடுத்து மக்களுக்கு இயக்கங்கள் பற்றியோ வெளிச் சக்திகள் பற்றியோ அதீத நம்பிக்கையைக் கொடுப்போமாயின் மக்கள் தமது பொறுப்பை மறந்து அதீத நம்பிக்கைக்கு உள்ளாகி விடுதலை உடன் கிடைத்துவிடும் என்று எண்ணத்தில் மூழ்கி பின் அது கைகூடாதபோது பலத்த விரக்தியையே உருவாக்கும் நிலைக்கே இட்டுச் செல்லும்.

இன்றைய கட்டம் தற்காப்புக் கட்டமென்பதை பல இயக்கங்கள் புரிந்துகொள்ளவில்லை. தாக்குதல் இல்லாத தற்காப்பில்லை. தாக்குதல்கள் தற்காப்பை நோக்காகக் கொண்டவையாயின் அவை தவறாகாது. ஆனால் நாமே வலிந்து தாக்குதல்களில் ஈடுபடுவது இன்றைய நிலையில் ஒரு தவறான போக்காகும்.

உண்மையில் தற்போதுள்ள தமிழீழத்தின் யதார்த்த நிலையானது, ஒரு முழுமையான தாக்குதலிற்கான நிலையல்ல என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. யதார்த்த நிலைகளை சரியாக ஆய்வு செய்வதன் மூலமும் அதைச் சரிவர விளங்கிக் கொள்வதன் மூலமுமே நாம் எமது நடவடிக்கைகளைச் சரியான திசை வழியில் நடைமுறைப்படுத்த முடியும். இதனை இயக்கங்கள் புரிந்துசெயற்படாவிடின் தமிழீழப் போராட்டம் தற்காலிக தேக்க நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் ஒரு தயாரிப்பு கட்டத்தில் இருக்கும் எமது இயக்கங்கள் எல்லாம், ஒன்றிணைந்த தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவது மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம். இயக்கங்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தவும் தவறான வழியில் வழி நடத்தி அழிவை ஏற்படுத்தி போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவரவும் பல பிற்போக்கு சக்திகள் இயக்கங்களுக்குள்ளேயும் வெளியேயும் இருந்து செயற்படுகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் உண்மையான எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை இயக்கங்கள் புரிந்துகொள்ளவில்லையானால் அவை அழிவிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள முடியாது. இயக்கங்கள் இதனையுணர்ந்து ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயல்படமுன் வருவதை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி ஆதரிப்பதுடன் அதில் தனது முழுமையான பங்களிப்பை நல்க தயாராயுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறது. இன்றைய நிலையில் தற்காப்பு வேலையில் கூடிய கவனம் செலுத்துமாறும் அதற்காக ஒருங்கிணைந்த செயற்பாட்டிற்கு வருமாறும் விடுதலை இயக்கங்களை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி அறை கூவி அழைக்கின்றது ●

---

**"போராளிகளை அழிக்கபடலாம் போராட்டம் அழிவதில்லை !**
**மனிதர்கள் தோற்கலாம் மானுடம் தோற்பதில்லை ! "**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விரோதிகள் ஒழிப்பும் மக்கள் இயக்கத்தின் பங்கும்

சமூக விரோதிகள் என்ற பெயரில் அடிக்கடி தமிழீழத்தின் மின்சாரக் கம்பங்களும், தெருவோர மதிற்குந்துகளும் மனித உடல்களால் அலங்கரிக்கப்படுகின்றன. அதை செயலாக்கியதற்கான உரிமை கோரி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதும், சுவரொட்டிகள் ஒட்டப்படுவதும் அடிக்கடி நடந்து கொண்டிருக்கின்றன. இயக்கங்களைக் காட்டிக் கொடுப்பவர்கள், இயக்கங்களின் பெயரைச் சொல்லிக் கொள்ளை அடிப்பவர்கள், தனிப்பட்ட கொள்ளை, களவுகளில் ஈடுபடுபவர்கள், கற்பழிப்பு போன்ற இதர சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்று இந்த சமூக விரோதிகள் பல்வேறு வடிவங்களில் தோற்றம் தருகிறார்கள்! இவர்களுக்கிடையில் எந்தவித பாகுபாடுமின்றி இயக்கத்தோழர்களின் விசாரணைகளின் பின்னான மரணதண்டனைகள் வெகு சாதாரணமாக இன்றெல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தப்பித்தவறி இயக்கத்தோழர்கள் இந்த விஷயங்களில் சற்று அசிரத்தையாக இருந்து விட்டாலோ தமிழீழ மக்களுக்கு இருப்புக் கொள்ளாது. உடனே யாழ்நகர்ச் சுவர்கள் புதிய சுவரொட்டிகளுடன் நிமிர்ந்து நிற்கும். இயக்கத் தோழர்களை நோக்கி மக்கள் கேட்டிருப்பார்கள் "உங்கள் கண்களில் இவை படவில்லையா?" என்று தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபடுவோரைப்பற்றி, இயக்கங்களின் பெயரில் செயற்படுபவர்களைப் பற்றியெல்லாம் மக்கள் கேள்விகளை எழுப்புகிறார்கள்! இவர்களுக்கு விசாரணைகள் நடக்கின்றன. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எப்படியோ மக்கள், இயக்கங்களிடம் தமது சிவில் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டார்கள்! இயக்கத்தோழர்கள் கவனியாதிருந்தால் முறையிடுகிறார்கள்! தமிழீழச் சுவர்கள் இன்று மக்கள் "முறைப்பாடு" செய்யும் போலீஸ் நிலைய முறைப்பாட்டுப் புத்தகங்களாகி விட்டன!

இதிலுள்ள வேதனைக்குரிய அம்சம் என்னவென்றால், மரணதண்டனைகளை வழங்கி, அவற்றை வழங்கியதற்கான காரணங்களை அறிவித்து, நாற்சந்திகளில் கட்டித்தூக்கிய பின்னும்கூட இன்னும் இத்தகைய விஷயங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருப்பதை இயக்கத்தோழர்கள் புரிந்து கொள்ளாதது தான்! தொடர்ந்து இத்தகைய "தண்டனைகள்" நடைபெறுவது இதைத்தான் காட்டுகிறது.

அண்மையில் மூன்று சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த "சமூக விரோதிகள்" மரண தண்டனைக்குள்ளானதையடுத்து கொழும்புத் தினசரிகள் அதை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து இருந்தன. அத்துலத்முதலி ஹரிஜனங்களை பயங்கரவாதிகள் கொல்கிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடித்துப் பேசிய பேச்சுக்கள் அவற்றில் முக்கிய இடம் பெற்றன. அதுவரை மௌனம் சாதித்துக் கொண்டிருந்த அஹிம்சை நெறி வீரர் மாஜித் தளபதி அமிர்தலிங்கம் பத்திரிகைகட்கு அறிக்கை விடுத்தார்; "அரசு தமிழினத்தைப் பிளவுபடுத்த முயல்கிறது." இந்த சம்பவங்களின்பின் மக்கள் முணுமுணுக்கத் தொடங்கியிருப்பதை அவதானித்த இலக்கு நண்பர் ஒருவர் சொன்னார், இம்முறை மட்டும் யாழ் நகர் சுவர்கள் ஒன்றும் பேசவில்லையே?

இத்தகையதொரு அதிதீவிரவாதப் போக்கு வேகமாக எமது மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பைப் பெறும் என்பதில் எந்தவித மான சந்தேகமும் இல்லை. மக்களின் நலனிற் காக, அவர்களின் விடுதலைக்காக உழைப்· பவர்கள் என்ற முறையில் மக்கள் நலனிற்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவோரை சமூக விரோதிகளாகப் பார்ப்பதில் எந்தவித தவறுமில்லை. ஆனால் அவர்களை அழிப்பதன் மூலமாகவே இம்மாதிரியான சமூக விரோத நடவடிக்கைகளை ஒழித்துவிட முடியும் என நினைப்பது திரும்பவும் எமது பழையகால அரசியற் போக்கையே காட்டுகிறது. தனி நபர் பயங்கரவாதம் என்பது இதுதான். அதாவது, தனிநபர்களை அழிப்பதன் ஊடாக அத்தனிநபர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் போக்குகளை அழித்து விட முடியும் என்ற கருத்துப் போக்கு இத்தகையதொரு போக் கினை எமது சக இயக்கங்கள் தமது ஆரம்ப காலங்களில் தமது பிரதான போக்காகக் கொண்டிருந்தன. பின்னர் அவை நகர்ப்புறக் கெரில்லா நடவடிக்கைகளாக வளர்ச்சி யடைந்த ஒரு கட்டத்திற்கு திருத்தம் பெற்றன. ஆயினும் சமீபகாலமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் இத்தகைய ஒரு போக்கு முற்றாக இன்னும் இயக்கங்களிடமிருந்து அழிந்து விடவில்லை என்பதையே உறுதிப்படுத்துகிறது.

ஒருவகை அதிதீவிரவாதப் போக்கினை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய நட வடிக்கைகள் சுத்த ராணுவக் கண்ணோட்டத் திலிருந்தே பிறக்கிறது. சுத்த இராணுவக் கண்ணோட்டம் என்பது எதற்கும் இராணுவ முடிவுகளையே முதன்மைப்படுத்திப்பார்க்கும் கண்ணோட்டமாகும். மற்றெல்லா அணுகு முறைகளை விடவும் இராணுவ முறைகளையே முதன்மையாகக் கருதிச் செயற்படுவதே இது வாகும். இத்தகைய போக்கு எமது இயக்கங் களிடையே பல்வேறு தவறான முடிவுகளை எடுக்கவும் வீணான பிளவுகளுக்கும், இழப்புக் களுக்கும் வழி கோலவும் செய்தது. இது தனது வளர்ச்சிப் போக்கில் வெறும் ஆயுத வெறியை, சரியாகச் சொல்லப்போனால் இரத்த வெறியை உருவாக்கி விடக் கூடிய ஆபத்தான அம்சத்தைக் கொண்டது. ஒரு இலக்கை நோக்கி செல்வதற்கான செயற் பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்குப் பதிலாக இராணுவ முடிவொன்றை வைத்துக் கொண்டே அதற்கான இலக்குகளை தேடுகிற போக்கை இது உருவாக்கிவிடும்.

இத்தகைய போக்கு இன்னொரு வகை யாக பின்வருமாறு நியாயப் படுத்தப்படு கிறது. அடிக்கடி ஏதாவது செய்து கொண் டிருக்காவிட்டால் மக்களுக்கு சலிப்பு ஏற் பட்டு விடுகிறது இயக்கங்கள்மீது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்கவும், ஒருவகை'ரென்சன்'(பதட்டமான)நிலையைத் தொடர்ந்து பேணிக் கொண்டிருக்கவும் இது மிகவும் அவசியமானது. இப்படி ஒன்றுமே செய்துகொண்டு இருக்காவிட்டால் 'என்ன ஒண்டையும் காணவில்லை' என்று 'சனம் சலிப்படையத் தொடங்கிவிடுகிறது

*யார் இந்த சனம்?*

விடுதலைப் போராட்டத்தை - அதாவது தமது சொந்த விடுதலைக்கான போராட் டத்தை முன்னெடுக்க வேண்டிய மக்களல் லவா இவர்கள். இவர்கள் தமது பிரச்சினை களுக்காக யாராவது ஏதாவது செய்துமுடிக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண் டிருக்க முடியுமா? முன்பெல்லாம் கூட்டணி மீது நம்பிக்கை வைத்து, அது தமிழீழத்தை பாராளுமன்றத்தில் வாங்கி வரும் என்று புள்ளடி போட்டுவிட்டுக் காத்திருந்த இந்த மக்கள் அதே நிலையிலேயே இன்றும் இருக் கின்றார்கள். முன்பு கூட்டணியிலிருந்த நம்பிக்கை இப்போது பெடியன்களிடம் மாறி யிருக்கிறது. தாம் தமக்காகப் போராட வேண்டுமென்ற எண்ணம் இவர்களிடம் ஒரு போக்காக இன்னும் வளரவில்லை வெறுமனே நம்பிக்கை மட்டுமே மாறியிருக்கிறது.

கூட்டணியின் பெருமையை உச்சரித்த நிலைபோய் இன்று பெடியங்களை எதிர்பார்க் கின்ற நிலை வந்து இருக்கின்றதென்றால் இதற் குக் காரணம் என்ன? போராட்டத்தில் பங்கு பெற வேண்டிய மக்கள் வெறுமனே சினிமா ரசிகர் கூட்டம் விசில்டிப்பதுபோல விசிலடித் துக் கொண்டும் பெடியங்கள் மட்டுமே தமிழீழத்தையும் தமிழ் மக்களையும் காக்க வந்த அவதார புருஷர்கள் என அவர்களை நம்பி, தாம் சும்மாகவே இருக்கின்ற இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை ஏன் நீடித்துக்கொண்டு இருக்கிறது? காரணம் மிகவும் தெளிவானது

எமது மக்களின் கடந்தகால அரசியற் தலைமையைக் கைப்பற்றி வைத்திருந்த கூட்டணியும் சரி, இன்றைய இளைஞர் இயக்கங்களும் சரி தமது அரசியல் நடவடிக்கைகளில் மக்களைப் பார்வையாளர்களாகவே வைத்து இருக்கின்றனர். மக்கள் தமது பிரச்சினைகளுக்காக தாமே போராட வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்கோ, அதற்கு அவர்களை அணி திரட்டுகின்ற விதத்திலோ இங்குள்ள அரசியல் சக்திகள், தலைமைகள் செயற்பட்டது கிடையாது. மக்களின் பிரச்சினைகளுக்காக சில வீரர்கள் போராடுகின்றதையே ஒரு போக்காக இவை இங்கு உருவாக்கி விட்டிருக்கின்றன. அரசியலில் மக்களின் பங்கை வலியுறுத்தி ஒரு பாரிய அரசியல் விழிப்புணர்வை உருவாக்குவதில் இந்த இயக்கங்கள் தவறுகள் விட்டதோடல்லாமல் தொடர்ந்தும் அது பற்றிய பிரக்ஞையின்றி, அதே மாதிரியான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு பாடசாலை அதிபர் அதிகார வெறியுடன் நடந்து கொண்டால், ஒரு தொழிற்சாலை அதிபரோ, அதிகாரியோ அளவு மீறிய சுரண்டலிலீடுபட்டால், சாதி வெறியினர் சிறுபான்மையினரைத் துன்புறுத்தினால், அடித்து விரட்டினால், ஊரில் பதவி வெறியர்களால் பொது அமைதி குலைந்து போனால், கோவில்களில் உயிர்ப் பலி தடை செய்யப்பட வேண்டுமானால், வெளிநாட்டு ஏஜென்சி மோசடி செய்தால், அங்கெல்லாம் எமது இயக்கங்களின் தோழர்கள் பிரசன்னமாக வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் இவற்றையெல்லாம் தமது பிரச்சினையாக, தாமே தீர்க்க வேண்டிய பிரச்சினையாக நினைப்பதே இல்லை. தாம் துன்புறுத்தப்படும் போதெல்லாம், அடக்கப்படும் போதெல்லாம் தாம் அமைதியாக இருக்கையில் இயக்கங்களோ இயக்கத் தோழர்களோ அவற்றைத்தீர்த்து வைக்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என கேட்கிறார்கள். இத்தகைய சமுதாய விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை விசாரிக்கவும், தண்டனை வழங்கவும் நடப்பிலுள்ள சிவில் நிர்வாகம் சீர்குலைந்து அல்லது நம்பிக்கையற்றுப்போய் விடும்போது மக்கள் தமது அதிகாரத்தைநிலை நாட்டிக் கொள்ளும்வரை எப்படிக் கையாளுவது என்ற மலைப்பும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒரு காரணம் எனலாம். இத்தகைய தொரு மலைப்பு ஏற்படுவதற்கான காரணமே மக்களுக்குத் தமது சக்தியின் மீதுள்ள நம்பிக்கையைப் பலப்படுத்தும் விதத்தில் அவர்கள் ஒழுங்கமைக்கப்படாமையே ஆகும். மக்கள் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்தாபனம் ஆகுகையில் அவர்களுக்குள்ள சக்தி மகத்தானது அந்த மகத்தான சக்தியில் நம்பிக்கையில்லாத வரைக்கும் இத்தகைய மலைப்புக்களும் உதிரி நடவடிக்கைகளில் திருப்தி காண்கிற, தீர்வு காண்கிற எண்ணமுமே நிலவும். மக்கள் தாம் போராடுவதற்குப் பதிலாக, தமக்காக யாராவது போராட வேண்டும் என்று எதிர்பார்க்கிற விதத்தில் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள்.

சைவ சமய புராணக் கதைகளில் அடிக்கடி இப்படியான சம்பவங்கள் வரும்.

தேவர்கள் அல்லது இறையடியார்கள் அசுரர்களால் துன்புறுத்தப் படுவார்கள். தேவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிடுவார்கள். சிவபிரான் அவர்களை காப்பதாக உறுதி கூறி ஒரு அவதாரம் ஒன்றை உருவாக்குவார்; அல்லது அவதரிப்பார்.

முருகனாக, விநாயகனாக...இந்த அவதாரங்கள் தோன்றி அசுரர்களையழித்து தேவர்களைக் காப்பாற்றும். தேவர்கள் சுகமாக வாழ்வார்கள்.

தேவர்கள் தம்மீது ஏற்படுகிற துன்பங்களை காக்க தாம் போராடியது கிடையாது. அவர்கள் அதற்காக இறை அவதாரம் ஒன்றை எதிர்பார்ப்பார்கள். அதுபோலவே எமது மக்களும், சில இயக்கங்களும் அவற்றின் தோழர்களும் தம்மைப் பாதுகாத்து விடுவார்கள் என நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். மக்கள் இப்படி இருக்கும் அதே நேரத்தில் இயக்கங்களும் அதை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கின்ற விதத்திலேயே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இயக்கங்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் ஒரு படி அதிகமாக மக்களைப் பார்வையாளராக்கும் செயலாகவே மாறி வருகிறது.

எமது இயக்கங்கள் இந்த நிலையில் தொடர்ந்து இயங்குவதற்கான அடிப்படைக் காரணம் மக்கள் சக்தியில் உண்மையான நம்பிக்கையின்மையே ஆகும். மக்களிடம் உண்மையில் நம்பிக்கை வைத்து அவர்களிடையே வேலை செய்வதினூடாகவே, அவர்களை ஸ்தாபன ரீதியில் அணி திரட்டுவதனூடாகவே விடுதலைக்கான போராட்டத்தை வென்றெடுக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்ளாமல், மிகவும் பொறுமையுடன் நீண்ட கால நோக்கில் செயற்படுத்த வேண்டிய மக்கள் போராட்டத்தை 'புதியவிளக்கங்களுடன்' செயல்படுத்த முனைவதுதான் எமது இயக்கங்களிடையே காணப்படும் போக்காகும். இந்தப் போக்கே பிரச்சினைகளை மக்களிடம் விட்டு அவர்களை போராட்டத்திற்கு தக்கவிதத்தில் வளர்ப்பதினை நிராகரித்து உடனடியான நடவடிக்கைகளிலும், தீர்வுகளிலும் இறங்குகிறது.

மக்களிடையே நாம் சரிவர வேலை செய்யும்வரை அவர்கள் எமது போராட்டத்தில் அணி சேர்ந்து கொள்ளப்போவது கிடையாது. வெறும் பார்வையாளர்களாகவே இருப்பார்கள். இது எமது சிக்கலான போராட்டத்திற்கு பலமூட்டப் போவதில்லை. மாறாக, மோசமான நெருக்கடிகளையே கொடுக்கும் அல்லது தன்னெழுச்சியான போக்கை உருவாக்கி இலகுவில் முறியடிக்கப்பட்டோ, திசை மாறியோ அழிந்து போகும். சில சிறப்பான சூழ்நிலைகளில் அது வெற்றியைக் கொடுக்கக் கூடுமாயினும், அது நிச்சயமற்ற, உறுதியற்ற வெற்றியாகவே இருக்கும். தேசிய விடுதலையில் இராணுவத்தை அகற்றுவது என்பது, முதலாவது படிக்கல் (Step) மட்டுமே. அதன் பின்னரே உண்மையானதும், முழுமையானதுமான போராட்டம் ஆரம்பமாகிறது. எனவே நிச்சயமான வெற்றியை உறுதி செய்கின்ற, மக்கள் போராட்டத்தினை முன்னெடுக்கின்ற விதத்தில், மக்களை அணி திரட்டுவதற்கு குந்தகமாக உள்ள, அவர்களை பார்வையாளர்களாக வைத்திருக்கவே உதவுகிற எந்த போராட்ட முறைகளும் பயனற்றவையே. இந்த சமூக விரோதிகள் ஒழிப்பு நடவடிக்கைகளும், மக்கள் சமூக விரோதநடவடிக்கைகளை ஒழிக்கும் நோக்கில் ஆற்றவேண்டிய பங்கைப் பற்றி அக்கறையற்று மக்களிடம் ஒருவகை மலிவான செல்வாக்கை வாங்கிக் கொள்வதற்கான நடவடிக்கையாகவே நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாம் மக்கள் என்று சொல்லும்போது எல்லாத் தமிழீழத் தேசியப் பிரிவினரையுமே குறிப்பிடுகிறோம். இவர்கள் மத்தியிலுள்ள பிரச்சினைகளை கையாள்கையில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பரந்துபட்ட மக்கள் மத்தியிலே, மக்கள் நலனுக்கு விரோதமாகச் செயற்படும் சக்திகளை நாம் அழிப்பதன் மூலம் இந்த சமூக விரோதப் போக்கை ஒருபோதும் அழித்துவிட முடியாது. இந்தப் போக்கானது சில தனி மனிதர்களின் மன விருப்பினடியாகத் தோன்றி வளரும் ஒன்றல்ல. இங்குள்ள சமூக நிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைகளே இவற்றை உருவாக்கி விட்டுள்ளன. எனவே இத்தகைய சமூக நெருக்கடிகளுக்கான அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்து அதைக் களைவதினூடாகவே இத்தகைய போக்கை இல்லாதொழிக்க முடியும். அதற்குப் பதிலாகத் தனித்தனியாக சமூக விரோதிகளைத் தேடித்தேடி அழித்துக் கொண்டுபோவோமாயின் நாம்ஒருவித தீவிர இடதுசீர்திருத்தவாதத்தில் போய்விழுவோம். அதாவது மக்களின் எதிரிகள் உருவாகுவதற்கான காரணிகளை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக, இந்தச் சமூக அமைப்பின் பிற்போக்கு நிலையை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக, அதை அப்படியே பேணிக்கொண்டு இத்தகைய கொலைகள் மூலம் நிலைமையைச் சீர்திருத்த முனைவதாகும். இது ஒரு காரிய சாத்தியமற்ற நடவடிக்கையாகும். இது சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதிகளை இல்லாமல் ஆக்குவதற்குப் பதிலாக, அவர்கள் இந்த நிலைமைக்குள் மேலும் தந்திரமாகத் தப்பித்துக் கொள்வதற்கான புதிய புதிய வழிமுறைகளைக் கையாள வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. சமூக விரோதிகளை மக்களிடமிருந்து தனிமைபடுத்துகின்ற சகல கூறுகளையும் தந்திரமாக மறைத்து தப்பித்து இந்த நடவடிக்கைகளை நுணுக்கமாக மேற்கொள்வதற்கு ஆன வழிகளையே இது உருவாக்கி விடுகிறது. தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் தம்மை விடுதலை இயக்கங்களாகக் கூறிக் கொண்டு இக்கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். ஒரு விடுதலை இயக்கத்திற்கும், தனிப்பட்ட சமூக விரோதிகளுக்கும் இடையில் வித்தியாசம் தெரியாத விதத்தில், அவர்களும்கூட தம்மை ஸ்தாபனப் படுத்திக்கொண்டு இயங்கும் நிலையையும் இது உருவாக்கும்.

சமூக விரோதிகள் அழிப்பில், ஒரு உண்மையான விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கின்ற, அதன் மறைவிடங்களை எதிரிக்குத் தெரியப்படுத்துகின்ற எதிரிகளை அழிப்பது என்பதைத் தவிர மற்றெல்லா வகையும் தவிர்க்கப்படல் வேண்டும். உதாரணமாக வல்வெட்டித் துறை பொலிஸ் நிலைய சார்ஜன் நவரத்தினம் கொலை செய்யப்பட்டது. ஒரு தவிர்க்க முடியாத செய்கையே. இதிலுள்ள சிறப்பம்சமே, அவனது நடவடிக்கைகளை ஆதார பூர்வமாக மக்கள்முன் அம்பலப் படுத்தியதே ஆகும். ஆனால் அதேபோல அதே தண்டனையை கள்வர்களுக்கும், காவாலிகளுக்கும் விதிப்பது எந்த விதத்திலும் ஒன்றல்ல. இத்தகைய நடவடிக்கைகளில் ஒரு விடுதலை இயக்கம் தன்னை ஈடுபடுத்திக் கொள்கையில் அது இரண்டுவிதமான தவறுகளைச் செய்ய நேரிடுகிறது.

1. மக்களது பங்கினை மறந்து, மக்களை மேலும் பார்வையாளராக்குகிறது.
2. தனது இறுதி இலக்குக்கான நடவடிக்கைகளில் ஆர்வத்தை விடவும்,

இதிலேயே தன்னை தவிர்க்க முடியாமல் கட்டிப் போட்டுக்கொள்ள நேரிடுகிறது.

அதாவது, இயக்கம் சமூக விரோதிகள் ஒழிப்புக்காகவே ஒரு தனியான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதைத் தவிர மூன்றாவது ஒரு விளைவும் ஏற்படுகிறது. சமூக விரோதி ஒழிப்பில் அப்பாவிகள் அநியாயமாக பலியாக வேண்டியும் ஏற்படுகின்றது. சமூக விரோதிகள் பற்றி பெற்றுக் கொள்ளும் தகவல்கள் சில தனி நபர்கள்மீது சோடிக்கப்படுவதற்கும் வாய்ப்புண்டு. இவை விரைவில் மக்கள் மத்தியில் ஒருவித எரிச்சல் உணர்வை தூண்டி இயக்கங்களுக்கு எதிரான போக்கை காலப்போக்கில் வளர்க்கும்.

இத்தகைய சமூக விரோதப் போக்குகள் தனி மனிதர்களை அழிப்பதனூடாக மாற்றப்பட முடியாதவை. இவை இந்த சமூக அமைப்பை மாற்றுவதற்கான போராட்டத்தை வெற்றிகரமாக முடித்தெடுப்பதினூடாகவே சாத்தியப் படுத்தக் கூடியவை. எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முடித்தெடுத்து, ஒரு மக்கள் குடியரசை அமைப்பதனூடாவே இத்தகைய சமுதாய மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். அத்தகைய சமூக மாற்றத்திற்கான போராட்டம் முடியும் வரையிலான காலகட்டத்தில் மக்களிடையே எழுச்சிமிகு போராட்ட அணிகளை கட்டுவதினூடாகவே இவற்றை இல்லாதொழிக்க முடியும்.

மக்களை ஸ்தாபன ரீதியில் அணி திரட்டுவதினூடாக, அவர்களிடமிருந்து சமூக விரோதிகளை தனிமைப்படுத்துவதும், விமர்சன சுய விமர்சன போராட்டங்களுக்கு உட்படுத்துவதினூடாகவுமே இவற்றை சிறிது சிறிதாக அழிக்க முடியும்.

சமூக விரோதிகள் ஆகாயத்தில் இருந்து குதிப்பவர்களோ, பிறக்கும்போதே அப்படி பிறப்பவர்களோ அல்ல; அவர்கள் இந்த சமூக அமைப்பின் விளைபொருட்களே. எனவே சமூக அமைப்பை மாற்றப் போராடும்நாம் சமூக விரோதிகளை திருத்தவே முடியாதவர்களாகக் கருதி கொலைத் தண்டனை வழங்குவதை நிராகரிக்க வேண்டும். அவர்களை பரந்துபட்ட மக்கள் சக்தியின் உதவியுடன் திருத்த முயல வேண்டும். அதன் மூலம் சகல சமூகக் குறைபாடுகளையும் களைந்தெறியும் புரட்சிகர போராட்டத்தில் மேலும் முன்னேற வேண்டும்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் குறிப்புகள்

## 1. வேண்டாம் ஹர்த்தால்!

அன்னையர் முன்னணி நடாத்திய உருக்க மான எதிர்ப்பு ஊர்வலங்களும், உண்ணாவிர தங்களும், "எங்கள் பிள்ளைகளை எங்களுக்குத் தாருங்கள்" என்ற மகஜர் கையளிப்புகளும் ஒரு விடயத்தை உணர்த்துவதாயிருந்தன. "எங்கடைசனம் போராட வரப்போற தாவது?" என்ற ஏளனக் குரல்களையும், இப்ப வெல்லாம் இப்படிப் போராடுகிறது ஆபத் தான விசயம்; ஆமிக்காரன் சுட்டுப்போடு வான்-ஆயுதப்போராட்டத்தில் தான் இறங்க வேணும்; "மற்றதுகளாலை பிரயோசனம் இல்லை." என்ற கருத்துக்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அவர்கள் சுயமாகப் போராட வந்திருக்கிறார்கள். பரந்துபட்ட மக்களையும் பொறுத்தவரை அவர்கள் ஒருபோதும் தமது சொந்த உரிமைகட்கான போராட்டத்திற்கு அஞ்சியது கிடையாது. தமது நோக்கத்தினை வென்றெடுக்க அவர்கள் போராடாது ஒதுங்கிப் போனதும் கிடையாது. மக்களைப் பிரிந்த ஒரு சில உதிரியான நபர்களே இந்தப் போராட்டங்கள் பற்றியும், மக்களைப் பற்றியும் அவநம்பிக்கைக் குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்

இந்த ஊர்வலப் போராட்டங்களைத் தொடர்ந்து இங்கு நடைபெற்ற மாணவர்கள் மீதான தாக்குதல்களை எதிர்த்து மாணவர் போராட்டங்கள் பரவலாக நடைபெற்றன. உண்ணாவிரதம், மௌன ஊர்வலம் போன்ற வைகள் நடைபெற்றன. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் அதன் நூல்நிலையமும் எரிக்கப்பட்டதையும், இந்துக் கல்லூரி, நடேஸ்வராக்கல்லூரி மாணவர்கள் தாக்கப் பட்டதையும் தொடர்ந்து இந்த மாணவர் போராட்டங்கள் ஆரம்பமாயின. தமிழீழம் முழுவதும் குறிப்பாக வடக்கு முழுவதும் மாணவர்களின் எதிர்ப்பும் (பாடசாலை) பகிஷ் கரிப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது. வட மாராட்சி மாணவர் ஒன்றியத்தின் தலைமையி லான தொடர் உண்ணாவிரதப் போராட்டங் கள் தொடர்ந்து நடைபெற்றன. இதில் இரண்டு விடயங்கள் பற்றி நாம் கவனித்தாக வேண்டும். ஒன்று, பகிஷ்கரிப்பு அல்லது ஹர்த் தால் என்ற போராட்ட வடிவம் பற்றியது, மற்றையது, நாம் எவ்வாறு எமது போராட் டத்தை முன்னெடுப்பது என்பது பற்றியது.

உண்மையில் இந்த ஹர்த்தால்கள், பகிஷ் கரிப்புக்கள் என்பவை, அதுவும் தொடர்ச்சி யாக வாரக்கணக்கில் நடாத்தப்படும்போது எந்தவிதமான பிரயோசனமுமற்றவையாகி விடுகின்றன. ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புக் கள் என்பன மக்கள் தமது எதிர்ப்பினைக் காட்ட அமைதியாக நடாத்தும் ஒன்று. ஆனால் இத்தகைய செயல்முறைகளில் மக்கள் ஈடுபடும் விதம் இங்கு மிகவும் வேதனையளிப் பதாக இருக்கிறது. ஹர்த்தால், கடையடைப்பு விடயங்கள் மக்களை அவர்கள் விருப்பத்தின் பேரில் நடாத்தும் வகையில் விட்டுவிட வேண்டும். ஆனால் இங்கு பெருமளவு ஹர்த் தால்கள், பகிஷ்கரிப்புக்கள் பயம் காரண மாகவே செய்யப்படுகின்றன. மக்களிடம் ஹர்த்தால் சம்பந்தப்பட்ட பிரச்சினையின் முக்கியத்துவம் தெரிவிக்கப்படாத போது, அவர்கள் அதைப் பூரணமாக விளங்கிக் கொள்ளமுடியாத போது பகிஷ்கரிப்பு என்பதும், கடையடைப்பு என்பதும் அவர் களால் விளங்கிக்கொள்ளமுடியாத ஒரு விடய மாகவே இருக்கும். இந்த நிலையில் அவர்களை இத்தகைய பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்த அச்சுறுத்தல் அல்லது பயங்காட்டல் (முக்கிய சந்திகளில் டைனமற் வெடித்தல்-பஸ்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பியனுப்புதல்) போன்ற விதங்களிலேயே இவை செயல் பூர்வமாக்கப்படுகின்றன. இது மிகவும் வேதனைக்குரிய ஒரு அம்சமாகும். மக்களை அவர்கள் போராடும் விதத்தில் வளர்ப்பதற்குப் பதிலாக அவர்களை அச்சுறுத்துவது என்பது விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு உகந்ததல்ல. அன்றியும் இந்த ஹர்த்தால், பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பத்தில் எமது மக்கள் விரும்பியே செய்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஆனால் இவைகள் மூலம் நாம் எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்கு உள்ளேயே அடைந்து கிடைப்பதை எவ்வளவு காலம்தான் சலிக்காமல் செய்து கொண்டிருக்க முடியும்? போராட்டம் என்பது போராடுதலேயன்றி அமைதியாக ஒதுங்கியிருத்தலல்ல. மக்களை வீட்டிற்குள் இருஎன்று கேட்பதற்குப்பதில் அவர்களை வீதியில் இறங்கும்படி கேட்டால் அது ஒரு பயனுள்ள விளைவைத் தரும்.

இன்றைய சூழ்நிலையில் ஹர்த்தாலும், பகிஷ்கரிப்பும் மக்களை வீட்டிற்குள் அடைந்து கிடக்கச் செய்யும் செயலற்ற தன்மையைத் தூண்டும் போராட்ட முறைகளே. இவை அரசியல் உணர்வை,போராட்ட உணர்வைத் தூண்டுவதற்குப் பதில் மந்தப்படுத்தவே செய்கின்றன. மக்கள், அரசியல் விழிப்படைந்துள்ள ஒரு சூழ்நிலையில் இவைகளும்கூட பயனளிக்கலாமாயினும், அவை இன்றைய நிலையில் பயனளிப்பதைவிட பாதகமான விளைவுகளையே தருகின்றன. மக்களுக்கு இந்தப் போராட்ட வடிவத்தில் அதிருப்தி ஏற்படுகிறது. போராட்ட வேளைகளில் இயல்பாக இருக்க வேண்டிய போராட்டக் குணம்சம் மறைந்து அவர்கள் வீட்டினுள் அடைந்து கிடக்கின்றனர். தோழர்கள் குட்டிமணி தங்கத்துரை உள்ளிட்ட எமது போராளிகளின் படுகொலை ஞாபகார்த்த பகிஷ்கரிப்பு அறைகூவல் மக்கள் மத்தியில் எந்த வகையிலும் பலமாக வேலை செய்யவில்லை. சிறையில் படுகொலை செய்யப்பட்ட எமது தோழர்கள், எமது விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த தியாகிகள் என்ற உணர்வுடன் இவர்கள் ஹர்த்தால் நடாத்தவில்லை. வீடுகளில் வீடியோ படங்கள் பார்க்க ஒழுங்கு செய்தார்கள், மாவிட்டபுரத்தில் திருவிழா நடாத்தினார்கள்......ஓ...இன்னும் நிறையச் சொல்லலாம். ஆனால் இந்த நிலையைப் பார்த்து விட்டு இயக்கங்கள் ஆத்திரமுறுவதோ, திருவிழாவைக் குழப்ப முயல்வதோ அர்த்தமற்றது. இந்த அனுபவங்கள் எமக்குக் கற்றுத்தருவது என்ன? இன்றைய நிலையில் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்தவகை ஹர்த்தால் போராட்டங்களில் சலிப்படைகிறார்கள், என்பதுதான். ஏனென்றால் அது அவர்களுக்கு அரசியலை விளக்கவில்லை; அரசியல் உணர்வை ஊட்டவில்லை; போர்க்குணம்சத்தை வளர்க்கவில்லை. மாறாக அவர்களை வீட்டில் அடைந்துகிடக்கவே செய்கிறது.

எனவே மக்களை அணி திரட்டி அவர்களை அரசியல் ரீதியாக வளர்க்கக்கூடிய விதத்திலேயே நாம் போராட்ட வடிவங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதைவிட ஹர்த்தாலுக்காக அறைகூவல் விடுத்தல், விரைவில் மக்கள் அதை எதிர்க்கவும் புறப்படலாம். அண்மையில் பாடசாலை மாணவர்கள் ஹர்த்தால் அறைகூவலை எதிர்த்து அறிக்கைகூட விட்டிருந்தார்கள். இதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எமது போராட்டங்கள் மக்களை அணி திரட்டும் விதத்தில் அவர்களை வீதியில் இறக்குவதாக அமையவேண்டும். வீட்டிற்குள் அடைந்து கிடக்கக் கோராது, அவர்களை வீதிகளில் இறக்கவே எமது அறைகூவல்கள் அமையவேண்டும். இதற்கு மக்கள் தயாராகவே இருப்பார்கள் என்பதற்கு அன்னையர் முன்னணி ஊர்வலம் மிகவும் நல்ல உதாரணமாகும். மக்கள் ஒன்று சேர்கையில் அரசியல் உணர்வையும், போராடும் உற்சாகத்தையும் பெறுகிறார்கள். அவர்களை அரசியல் மயப்படுத்தி நெறிப்படுத்துவதே எமது செயற் திட்டம் ஆக இருக்கவேண்டும். இன்றைய மாணவர்களின் பிரச்சினைகள் இந்த அரசினால் தீர்த்துவைக்கப்பட முடியாதவை; அவை, மக்கள் தமது கையில் அரசதிகாரத்தை எடுத்துக்கொண்ட-விடுதலையின்—பின்னரே சாத்தியமாகும்; மாணவர்கள் தமது போராட்டத்தை அரசியல்மயப்படுத்தி நெறிப்படுத்துவது அவசியம்; மக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு அவர்களது விடுதலைப்போராட்டத்தில் அங்கம் பெறுவது மூலமாகவே மாணவர்கள் தமது விடுதலையைப் பூரணமாகப் பெற முடியும் என்ற விடயங்களை மாணவர்களுக்கு ஊட்டுவதும், அவர்கள் போராட்டத்தை நெறிப்படுத்துவதும், அவர்களைத் தெருவில் இறங்கிப் போராட வைப்பதன் மூலமே சாத்தியமாகுமேயன்றி அவர்களை வீட்டிலடைந்து கிடக்கக் கோருவதால் அல்ல.

எனவே இந்த அர்த்தமற்ற ஹர்த்தால்களைக் கைவிட்டு, மக்களைப் போராடத் தூண்டும், அவர்களை அரசியல் மயப்படுத்தும், வேறு போராட்ட வடிவங்களை செயல் பூர்வமாக்க முயல்வோம். ஆனால் இவற்றிற்கு எமக்கு வெகுஜன ஸ்தாபனங்கள் தேவை. அந்த வெகுஜன ஸ்தாபனங்களைப் பலமாகக் கட்டுவதின் மூலம் இத்தகைய போராட்டங்களை வளர்ப்பதும், அவற்றினூடு மக்களை சரியான அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கும்விதத்தில் வளர்த்தெடுப்பதுமசாத்தியமாகும். இந்த மாணவர்கள் போராட்டம், அண்மையில் நடந்த வடபகுதி கடற்தொழிலாளர் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நெறிப்படுத்தி, அரசியல் மயப்படுத்தி அவர்களை ஜனநாயகப் புரட்சியின்—தேசிய விடுதலைப் போராட்டத்தின்—சக்திகளாக வளர்த்தெடுக்க முயல்வது மிகவும் அவசியமாகும்!

அர்த்தமற்ற ஹர்த்தால்களை மறப்போம்;

புரட்சிகர மக்கள் போராட்டத்திற்கு மக்களைத் தயார் செய்வோம்!

## 2. பரந்தளவில் மக்களை வென்றெடுப்போம்!

கொஞ்ச நாட்களுக்கு முன்பு கூட்டுறவு ஊழியர்களும், பின் 'அன்றாஸ்' கம்பனி ஊழியர்களும் விடுதலை இயக்கங்களின் கொள்கைகளை எதிர்த்து, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அண்மையில் கல்வியே எமது செல்வம். அது மட்டுமே முன்னேற்றத்திற்கு வழி. எனவே அதை அழிக்காதீர்கள்! பாடசாலைகளில் கொள்ளையிடாதீர்கள் என்ற மாணவர்களதும், ஆசிரியர்களதும் கோரிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகின. இதை விளக்கி பத்திரிகைகளில் ஆசிரிய தலையங்கங்களும் வெளிவந்தன...

இவை எமக்கு—நாம் தொடர்ந்து, சொல்லிவரும் கருத்தை மேலும் வலுப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இங்கு நடந்துகொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் எமது மக்களுக்கும் இடையில் உள்ள உறவு எந்தளவில் இருக்கிறது? ஏன் இவர்களால் இப்படிக் கோரிக்கை எழுப்ப முடிகிறது? இராணுவத்தின் அட்டகாசங்களை எதிர்த்து, தீவைப்பை எதிர்த்துபோராட முன் வராத மக்கள் இவற்றிற்கு மட்டும் போராட முன் வந்திருக்கிறார்களே ஏன்? இந்தக் கேள்விகளுக்கு சரியான பதிலை நாம் கண்டு கொண்டால் மட்டுமே இனி வரப் போகும் எதிர் விளைவுகளை எதிர்கொள்ளவும் போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்துச் செல்லவும் சாத்தியமாகும்.

உண்மையில் இங்கு நடந்துகொண்டிருப்பது தேசிய விடுதலைப் போராட்டம் என்பதோ, எமது மக்களின் சொந்த விடுதலைப் போராட்டம் என்பதோ எமது மக்களின் போராட்டம் என்பதோ, இங்கு உணரப்படவில்லை. இந்தப் போராட்டம் இன்னும் வெறும் இளைஞர் போராட்டமாகவே இருக்கிறது. இந்தப் போராட்டத்தை மக்களது போராட்டமாக மக்கள் உணராத வரை, அவர்கள் பார்வையாளர்களாக இருக்கும்வரை இவர்கள் இயக்கங்களை நோக்கி கேள்வி கேட்பவர்களாகவே இருப்பார்கள். பரந்துபட்ட மக்களுக்காக ஒரு சிலர் கோருவது என்ற செயல்முறை மக்களை அரசியல் மயப்படுத்தாமல் அவர்களைப் பார்வையாளர்களாகவே வைத்திருக்கிறது இதனால் அவர்கள் இங்கு நடக்கும் சம்பவங்கள் பற்றி கேள்வி எழுப்புபவர்களாகவே இருக்கமுடியும். இந்தக் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விடுதலை இயக்க—விடுதலைப் போராட்ட செயற்பாட்டின் ஒரு அம்சமாக (அது அப்படி இருப்பின்!) புரிந்து கொள்ளாது, அவற்றிற்கெதிராக போராடவே புறப்பட்டு விட்டார்கள் என்பது மிகவும் சிந்திக்க வேண்டிய முக்கியமான விடயமாகும்.

நாம் மக்களது முறைப்பாடுகளை உணர்ந்து கொள்ளவேண்டும். மக்களே எமது ஆசான்கள். மக்கள் தமது செயல் முறைகளினூடாக எமக்கு கற்பிக்கிறார்கள். அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களைச் சார்ந்து நின்று, அவர்களை அச்சுறுத்தி வேலை வாங்கும் எசமான்களாக அல்லாமல், அவர்களிடம் கற்றுக் கொள்பவர்களாக நாம் செயற்பட்டாக வேண்டும். அதன் மூலமாகவே நாம் எமது விடுதலைப் போராட்டத்தைச் சரிவர முன்னெடுக்கும் பலம் பெற்றவர்களாவோம்.

உண்மையில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு நாம் மக்களை அணி திரட்டி விடவில்லை. அவர்களிடம் இன்று நிலவுவது பழைய பிற்போக்கு அரசியலே. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலில் எப்படி மக்கள் பார்வையாளர்களாக இருந்தார்களோ, அவ்வாறே இன்னும் இருக்கிறார்கள். அவர்களது நம்பிக்கை மட்டும்தான் இடம் மாறியிருக்கிறது. ஆனால் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது கூட்டணி அரசியல் அல்ல; இது ஒரு புரட்சி யுத்தம். ஒரு மாலை நேரத் தேனீர் விருந்துபோல இதை அவ்வளவு சுலபமாக அழித்துவிட முடியாது. இந்த புரட்சி யுத்தம பரந்துபட்ட மக்களின் யுத்தம். ஏகாதிபத்திய, நிலபிரபுத்துவ, தரகு முதலாளிய பிற்போக்குக் குப்பல்களுக்கு எதிராக உறுதியாக மக்கள் நடத்த வேண்டிய யுத்தம். இதற்கு அவர்களைத் தயார் செய்து, வழி நடாத்திப் போராடுவதனூடாக மட்டுமே இதனைச் சாதிக்க முடியும் ஆனால் மக்களைப் பார்வையாளர்களாக வைத்துக்கொண்டு இதைச் சாத்தியமாக்கி விடமுடியாது.

எனவே நாம் செய்ய வேண்டியது என்ன?

நாம் செய்ய வேண்டியதெல்லாம் இது தான்: முதலில் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது மக்களால் நடாத்தப்பட வேண்டியதேயன்றி ஒரு சிலரால் அவர்களுக்காக நடத்தப்படக் கூடியது அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். மக்கள். மக்கள் யுத்தமாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும்போது மட்டுமே போராட்டம் வெற்றி பெறவும், சுதந்திரமும், தன்னுதிக்கமும் கொண்ட ஒரு ஜனநாயக குடியரசை உருவாக்குவதும் சாத்தியமாகும். எனவே இதற்கேற்ற விதத்தில் நாம் எமது செயற்பாடுகளைத் தயார் செய்ய வேண்டும் மக்களை அரசியல் மயப்படுத்துவதும், புரட்சிக்கு அவர்களைத் தயார் செய்வதும், அவர்களை ஸ்தாபன ரீதியில் அணி திரட்டுவதும் அவசியமாகும். இந்த இலக்கில் நாம் தீவிரமாக ஈடுபடுவதன் மூலமே மாணவர்கள் மத்தியில் தோன்றியுள்ள இந்தப் பிற்போக்குத்தனமான, மலட்டுத்தனமான கல்வியை உயர்த்திப் பிடிக்கும் போக்கை மாற்றவும், புரட்சிக் கல்வியை கற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களை மாற்றியமைப்பதும் சாத்தியமாகும். நிலவும் பிற்போக்குக் கருத்துக்களை உடைத்து அதனிடத்தில் புரட்சிக் கருத்துக்களை விதைப்பதினூடாக மட்டுமே மக்களைப் போராட்டத்திற்குத் தயார் செய்ய முடியும். மக்களைப் போராட்டத்திற்கு தயார் செய்வதில் நாம் வெற்றி பெறாத வரை, இத்தகைய கேள்விகளையே மக்கள் கேட்டுக் கொள்வார்கள்.

புரட்சி யுத்தம் என்பது பொதுமக்களின் யுத்தம்; அவர்கள் போராட முன் வராத வரை, இங்கு நடப்பவை ஒவ்வொன்றையும் பற்றிய, நிலவும் பிற்போக்கு சமூக அமைப்பின கருத்துக்களின் அடிப்படையிலேயே விளக்கம் காண்பார்கள். எனவே,

பரந்தளவில் மக்களை வென்றெடுப்போம்!

அவர்களைப் புரட்சிக்குத் தயார் செய்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தரகு முதலாளியத்தின் புதிய இலக்கு விவசாயிகள் !

பல்தேசியக் கம்பெனிகளிடம் இலங்கையின் வளங்களைச் சுரண்ட அனுமதி அளித்து வரும் இந்த ஜே. ஆரின் தரகு முதலாளிய யூ. என். பி. அரசானது, இப்போது விவசாய நிலங்களிலும் கைவைக்கத் தொடங்கியுள்ளது. 'விவசாய அபிவிருத்திப் பிரதேசங்கள்' எனப் பிரகடனப்படுத்திய இடங்களிலெல்லாம் பல் தேசிய கம்பனிகளை விவசாயக் கைத்தொழில்களை ஆரம்பிக்கவும், விவசாயம் செய்யவும் அனுமதித்துள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தைப் போல, கட்டற்ற சுரண்டலுக்கும், தொழிலாளர் உரிமை மறுப்புக்கும் பெயர் பெற்று விளங்கப் போகின்ற இந்த 'அபிவிருத்தி' பிற தேசங்களில் இக் கம்பெனிகள் தொழில் செய்வதற்கு விசேட வரிச் சலுகைகளும் ஊக்குவிப்புக்களும் அரசிடமிருந்து கிடைத்து வருகிறது.

இந்தப் பிரதேசங்களில் இக் கம்பெனிகள் தாம் நினைக்கின்ற பயிர்களை பெரியளவில் செய்யவும், அதற்காக குறைந்தளவு நஷ்ட ஈட்டுடனோ நஷ்ட ஈடின்றியோ அப்பகுதி மக்களை அப்புறப்படுத்தி விடவும், சூழவுள்ள மக்களை பலவந்தமாக தாம் விரும்பும் பயிர்களை செய்வித்து தமக்கே விற்பனை செய்விக்கவும், அதிகாரம் கொண்டிருக்கும். இந்த அரசின் படு பிற்போக்குத்தனமான இப்போக்கானது முழு மக்களது தலையிலும் பலத்த ஒடுக்குமுறைச் சுமைகளை ஏற்றியுள்ளது.

தற்போது, இத்திட்டத்தின்படி மொனராகலை மாவட்டத்தில் திட்டமிட்டபடி கரும்பு உற்பத்திக்கும், சீனித் தொழிற்சாலை நிறுவுவதற்குமான முயற்சிகள் மூன்று பெரிய வெளிநாட்டு கொம்பனிகளால் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி கிட்டத்தட்ட 12000 ஏக்கரில் வசிக்கும் மக்கள் அப்புறப்படுத்தப்படுவர்; 42000 ஏக்கரில் வசிக்கும் மக்கள் கட்டாய கரும்பு செய்கையிலீடுபடுத்தப்படுவர்.

அடுத்து மன்னார், வவுனியாப் பிரதேசங்களும் இந்த 'அபிவிருத்தி' பிரதேசங்களில் அடங்குவதால், மொனராகலையை அடுத்து இங்கும் இத்தகைய திட்டங்கள் தொடங்கப்படலாம். இங்குள்ள நெருக்கடி நிலை தற்போது இதை தாமதித்த போதும் அரசின் படுமோசமான இத்தகைய போக்கு விரைவில் அந்த நிலைமையை கொண்டு வரவே செய்யும். இன்று மொனராகலை விவசாயிகளின் நிலம் அன்னியக் கம்பெனிகளிடம் பறிபோவது போல விரைவிலேயே வவுனியாவிலும் மன்னாரிலும் இது நடக்கத்தான் போகிறது.

இந்தத் தரகு முதலாளிய யூ. என். பி அரசை நிர்மூலமாக்கி இங்குள்ள நவகாலனிய சமூக அமைப்பை துடைத்தெறிவதற்கான ஒருபுரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே இத்தகைய பொருளாதார சுரண்டல் போக்குக்கு முடிவு கட்ட முடியும். அரசின் இந்தமாதிரியான போக்கை எதிர்த்து சிங்கள மக்கள் மத்தியில் தோன்றும் எந்தவொரு ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தையும் நாம் ஆதரிக்கிறோம். தமிழ் மக்கள் தமது விடுதலையை வென்றெடுப்பதற்காக நடாத்தும் புரட்சிகரப் போராட்டத்திற்கும், சிங்கள ஒடுக்கப்படும் மக்களது விடுதலைக்கான போராட்டத்திற்கும், பொது எதிரியான இந்த தரகு முதலாளிய அரசை தனிமைப்படுத்தும் விதத்தில், சிங்கள புரட்சிகர சக்திகளுடன் நேசபூர்வமான உறவுகளை உருவாக்கிக்கொள்வதன் அவசியத்தை நாம் வலியுறுத்த விரும்புகிறோம். இந்த அரசின் இத்தகைய நடவடிக்கைகள் இதைமேலும் அவசியமானவை என வலியுறுத்துவதாயுள்ளன.

---

● புறநிலை உலகின் விதிகளைப் புரிந்து அவற்றை விளக்குவதில் திறமைபெற்றிருப்பது மிக முக்கியமான பிரச்சினை அல்ல; பதிலுக்கு ஊக்கமாக உலகை மாற்றுவதற்கு அவ்விதிகள் பற்றிய அறிவைப் பிரயோகிப்பது தான் மிக முக்கியமான பிரச்சினை என்று மார்க்சிச தத்துவம் கருதுகின்றது. —மாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இரகசியம் வராத புரட்சிக் கிராமம்!

அண்மையில் அடுத்தடுத்து தெல்லிப் பழை, கொக்குவில், கச்சேரியடி என்று விடு தலை இயக்கத் தோழர்களின் இருப்பிடங்கள் இராணுவத்தினரது வேட்டைக்கு இலக் காகின. வேதனைமிக்க சம்பவங்கள் நடந்து முடிந்த வடு திருமுன்பே யாழ்நகரில் ஓடும் பஸ்ஸில் வைத்து நாற்பது பிராணிகள் சுடப் பட்டிருக்கிறார்கள். இராணுவத்தின் அட்ட காசம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது பற்றியும் மொசாட்டின தந்திரோபாயங் களுடன் அது நடாத்திவரும் அழித்தொழிப்பு நடவடிக்கை பற்றியும் நாம் முன்பும் எமது குறிப்புக்களில் குறிப்பிட்டுள்ளோம். இந்த மேற்கூறிய 'முகாம்' வேட்டைகளைப் பார்க் கும்போது அரசுக்குத் திட்டவட்டமான தகவல்கள் சொல்வது தெளிவாகியுள்ளது. நிறையவே சி.ஐ.டிக்களை வடக்கு முழுவதும் அரசு உலவ விட்டிருப்பதுடன் தகவல்கள் பெற்றுக் கொள்வதில் வெற்றியும் பெற்று வருகிறது.

இந்த சம்பவங்கள் எமது கருத்தை மேலும் மேலும் வலியுறுத்துபவையாக இருக் கின்றன. மக்களைச் சார்ந்து அவர்களது இயக்கமாக நாம் பரிணமிக்காதவரை, விடு தலைப் போராட்டம் அவர்களது சொந்தப் போராட்டமாக மாற்றப் படாதவரை இத் தகைய அழிவுகளிலிருந்து நாம் தப்பிக்கொள் வது என்பது சாத்தியமே இல்லை. அரசியலைச் சரியாக கொடுக்காமல், மக்களைப் போராட் டத்திற்குத் தயார் செய்யாமல் இளைஞர் சக்திகளை வலுப்படுத்தி, ஆயுத குழுக்களாகப் பலவலாக்க நாம் முயலுவோமானால் அநியாய மாக இழப்புக்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு நாம் ஆளாவோம். இராணுவம் இன்று மிகவும் சுயேட்சையாக, ஒழுங்கை களெல்லாம் சுற்றி வரத் தொடங்கிவிட்டது. மக்களோ, அரசியலிலிருந்து—புரட்சிகர அர சியலிலிருந்து காத தூரத்திற்கு அப்பால் நிற்கிறார்கள். அவர்கள் பார்வையாளர் களாக இருப்பதால் இந்த 'நடவடிக்கைகள்' பிரச்சினைக்குரியவையாகக் கருத ஆரம்பிக்கும் போக்கு வளர்ந்து வருகிறது. இதை முறி யடிக்கவும், நாம் வெற்றிகரமாக எமது தளங் களை வலுவாக்கிக் கொள்ளவும், எம்மை மக்கள் இயக்கமாக உருமாற்றிக்கொள்ள வேண்டும். எதிரிக்கு வாய்ப்பளிப்பதற்கு நாம் இடமளிக்காமல் எம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் மக்களைத் தயார் செய்வதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் எம்மால் இந்த அழித் தொழிப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

விடுதலை என்பது ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ சாதிக்கப்பட்டு விடக்கூடிய ஒரு விடயமல்ல. அது ஒரு நீண்டகாலப் போராட் டத்தின் விளைவு, ஏகாதிபத்தியங்களிட மிருந்தும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களி டமிருந்தும் எமது தேசத்தையும் மக்களையும் மீட்டெடுக்கும் பணியில் நாம் வெற்றி பெறு வதென்பது ஒரு நீண்டகால மக்கள் யுத்த பாதை மூலமே சாத்தியமாகும். எனவே அந்த நோக்கில் மக்களை அணி திரட்ட, மக் களை நோக்கிச் செல்லத் தயாராக வேண்டும். மக்கள் என்ற இரும்புக் கோட்டையை நாம் வென்றெடுத்துவிட்டால் எந்த இராணுவத் தாலும் எம்மை எமது விடுதலையின் வெற்றி யிலிருந்து பிரித்துவிட முடியாது.

திகம்பரக் கவி சேரபண்டராஜூவின் புரட்சிக் கிராமம் கவிதைகளில் சில வரிகளை நினைவு கூர்வது இவ்விடத்தில் பொருத்தமாக இருக்கும்.

● தலை சாய்ந்து கிடக்கும்
செழுமையான நெல் தாள்களில்
முற்றிப்பழுத்த கதிர்களில்
பசுக்களின் குழம்புகளில்
மறிகளின் குட்டி வால்களில்
சேவல்களின் கொண்டைப் பூக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவ்;
எங்கே நீ தேடிடுவாய்?
யாரைத்தான் கைது செய்வாய்?
கரிசல் மண் வெடிப்புக்களில்
சிரிப்பிலும் அழுகையிலும்
விருந்துண்ட நிலைகளிலும்
யோவ்
தேடையா தேடு
ஓடி ஓடித் தேடு.

● பெண்களின் பின்னல்களில்
ஆண்களின் புதுச் செருப்புக் கிறீச்
சொலியில்
சுடுகாட்டு மண்டை ஓட்டில்
தேடையா தேடு.
பைத்தியமாய்த் தேடு.

● ஆயிரம் படைகள் வந்த போதிலும்
மயிரளவேனும் இரகசியம் வராது
புரட்சிக் கிராமம் இது!

ஆம்! புரட்சிக்கு மக்கள் தயாராகி விட்டால்—இயக்கம் மக்கள் இயக்கமாகி விட்டால், போராட்டம் மக்கள் போராட்டமாகி விட்டால், எதிரிக்கு அங்கு ஊடுருவி வெற்றி பெற முடியாது. எனவே இரகசியம் வராத புரட்சிக் கிராமங்களை உருவாக்க மக்களை நோக்கிச் செல்வோம்; புரட்சிக் கருத்துகளுடன்!

## 5. இந்திரா கொலையும் எமது மக்களும்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதையடுத்து தமிழ்ப் பகுதியின் மூலை முடுக்கெல்லாம் தனது அதிர்ச்சியை வெளிக்காட்டியது. கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களும், அஞ்சலிக் கூட்டங்களும், உண்ணாவிரதங்களும் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. நாமறிந்த வரை இந்த மரணச் செய்தியைவிட தமிழீழ மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய வேறெந்த வெளிநாட்டுச் செய்தியும் இல்லை. அவ்வளவு தூரம் இந்திரா கொலை தமிழ் மண் முழுவதும் எதிரொலித்தது.

இலங்கையின், அமெரிக்க சார்பு யூ. என். பி. அரசின் மிலேச்சத்தனமான கொடிய இராணுவ அட்டகாசங்களும், பெருந் தேசிய இனவெறிப் போக்கும் ஏற்படுத்தியுள்ள வெறுப்பும், விரக்தியும் கலந்த நிலையில் தமிழ் மக்களுக்கு சர்வ தேசிய ரீதியில் சார்புக் குரல் கொடுத்த நாடு என்ற வகையில் இந்தியாவின் பிரதமர் இந்திராவின் மறைவு தமிழ் மக்களிடையே பெரிய அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியிருந்தது. இந்தியா பற்றியும், இந்திரா பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் ஊட்டப்பட்டும், வளர்க்கப்பட்டும் வந்த நம்பிக்கையினை இந்தக் கொலை உடைத்துவிடுமோ என்ற பயமும்கூட இத்தகைய பரவலான சோக வெளிப்பாட்டிற்கு ஒரு காரணமாகும். எது எப்படியிருப்பினும் இந்திராவின் மரணத்தைக் கேட்டு அதிர்ச்சியுற்ற பிறநாட்டு மக்களில் தமிழீழ மக்கள்தான் முதன்மை பெறுகிறார்கள்.

ஆனால் இந்திராவின் மரணம் குறித்து அதிர்ச்சி சில இடங்களில் தமிழ் மக்களும், விடுதலைப் போராளிகளும் வெட்கப்படத்தக்க விதத்தில் வெளிப் பாடாகியிருப்பதை நினைத்து வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. இந்திராவின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவே அவர்கள் மீது வெறுப்பும், ஆத்திரமும் கலந்த குரோத உணர்வுடன் கூடிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. சீக்கிய கொடும்பாவிகள் கட்டப்பட்டு 'மரண தண்டனைகள்' நிறைவேற்றப்பட்டுள்ளதும், சீக்கிய கொடும்பாவிகள் கட்டி இழுக்கப்பட்டு 'சீக்கியர் ஒழிக' கோசங்கள் எழுப்பப்பட்டதையும் யாருமே கண்டிக்காமல் இருக்க முடியாது. இந்திய அரசு தமிழ் மக்கள் மீதான அரச ஒடுக்கு முறைகளுக்கெதிராக இருப்பதனால் மட்டுமே இந்திய அரசு பற்றிய மிகையான கணிப்பீடுகளுக்கு நாம் சென்று சீக்கிய மக்களையும் அவர்களது போராட்டங்களையும் தூற்றுவதோ அவர்களுக்குப் பிரச்சினையே கிடையாது என்று கூறித் திரிவதோ மிகவும் தவறான ஒரு செயலாகும். சீக்கியர்களிடையே இன்று இருக்கும் மதவெறிப் பிற்போக்கு பிந்தரன்வாலே தலைமையிலிருந்த குறைபாடுகளே இத்தகைய தனி மனித பயங்கரவாதப் போக்கிற்குக் காரணமாகும். தனிமனித பயங்கரவாதம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கப்போவது கிடையாது

திருமதி இந்திராவின் கொலையைத் தொடர்ந்து நடந்த இனக் கலவரமும், சீக்கிய படுகொலைகளும் வேதனைக்குரியவையும் வெறுக்கப்பட வேண்டியவையுமாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணி வெடித்தாக்குதல்

## சில பிரச்சினைகள்

தற்போதெல்லாம் சில விடுதலை இயக்கங்கள் வீதிகளில் குண்டுகளைப்புதைத்து வைத்து வெடிக்கச் செய்வதன் மூலம் இராணுவ வண்டிகளைத் தாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இத்தாக்குதல்களை வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல்களாகப் பிரச்சாரம் செய்வதோடுஇத்தகைய தாக்குதல்களில் ஈடுபடாத விடுதலை இயக்கங்களின் தோழர்களை 'உங்களால் இதைச் செய்ய முடியுமா?' என இந்த கெரில்லாத் தாக்குதல் இயக்கத் தோழர்கள் கிண்டல் செய்வதும் சாதாரண விடயமாகிவிட்டது. இத்தகைய நையாண்டிகளுக்குப் பின்னுள்ள வெற்றுவீரசாகசப்போக்கும்,மக்களின் விடுதலை பற்றி சரியான அரசியல் உணர்வோ, தெளிவோ அற்ற பேதமைத் தனமும் மிகவும் வெட்ட வெளிச்சமானவை. இந்த வீரசாகசக் குரல்கள் நீண்ட நாட்களுக்கு நிலைக்கப் போவதில்லை. எனவே இவர்களது இந்தக் கிண்டல் குரல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஆனால் இவர்கள் இதன் மூலம் எதனைச் சாதனையாக்கியுள்ளார்கள் என்ற கேள்விக்கு நாளை மக்கள் முன் பதில் சொல்லியே ஆக வேண்டிய அவசியம்நிட்சயம் வரும் என்பதில் ஐயமில்லை. கடந்த காலங்களில் கூட்டணியின் புரட்சிகரமான வாய்ச் சொற்கள் மக்களை உலுப்பியதும், பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வந்ததும், இன்று மக்கள் முன் அவர்கள் பதில் சொல்ல முடியாமல் நிற்பதும் நாம் மறந்து விடக்கூடாத படிப்பினைகள்.

உண்மையில் கெரில்லாத் தாக்குதல் என்பது புரட்சிகர எழுச்சி கொண்டுள்ள மக்களால் எதிரியை நிலைகுலையச் செய்யும் நோக்கில், தம்மைப் பலமாக்கிக் கொள்ளும் நோக்கில் செய்யப்படுவதாகும். மக்கள் ஆயுதரீதியாக பலமிக்க எதிரிக்கெதிராகப் போராடுகையில் கொரில்லாப் போராட்ட வடிவத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் இங்கு நடப்பது என்ன? ''கெரில்லா'' தாக்குதல் என புரட்சிகரமாக வர்ணிக்கப்படும் இந்தத் தாக்குதலின் போது மக்கள் பெட்டி பாய்களுடன் வீடுகளை விட்டு குடிபெயர்ந்து போகும் பரிதாபக் காட்சியே நிலவுகிறது. மக்களிடையே பயமும், பீதியும் உருவாகுவதுடன் இராணுவ காடைத்தனங்களின்காரணமாக வீடுகளும், சொத்துக்களும் எரிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் கோவில்களிலும், பொது இடங்களிலும் சொந்த மண்ணிலே அகதிகளாகின்றனர். ஏன் இந்த நிலைமை? உண்மையில் இங்கு நடைபெறும் போர்ராட்டம் மக்களது விடுதலைக்கான அவர்களது சொந்தப் போராட்டமாக இருந்தால் மக்கள் இப்படி பார்வையாளர்களாக இருப்பார்களா? அல்லது தெல்லிப்பழையில் மதவுக்கு வைத்த குண்டை எடுக்கும்படி இயக்கத்துடன் விவாதிப்பார்களா? இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது தமது சொந்த விடுதலைக்கான போராட்டம் என்பதில் முழுமையான நம்பிக்கையும், அதில் தாம் பூரணமாகப் பங்குபற்ற வேண்டும் என்ற அரசியலுணர்வும் மக்களிடையே இல்லாமையே, தமிழீழம் திடீரென யாராவது எடுத்துத் தரப்படும் என நம்பும் போக்கின் அடிப்படையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்துக்குப்பதிலாக, அதாவது மக்கள் தயார் செய்யப்படாத நிலையில் தாக்குதலில் ஈடுபடுவது தவறு என்று நாம் சொல்லும் கருத்துக்குப் பதிலாக ஆயுதம் சேகரிப்பதே நோக்கம் என்ற பதில் கருத்து முன்வைக்கப்படுகிறது. ஆனால் இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது? இங்கு நடைபெற்ற தாக்குதல்களில் ஆயுதம் கைப்பற்றும் நோக்கில் நடைபெற்ற தாக்குதல்கள் எத்தனை ? ஆயுதங்கள் பக்கவிளைவாக திருநெல்வேலி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் கிடைத்த போதும் தாக்குதலின் நோக்கம் எதிரிப்படைகளுடன் மோதி அழிப்பதாகவே இருந்துள்ளது. அத்துடன் இத்தாக்குதல்கள் எதற்காக? இவை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எந்தளவிற்கு உபயோகமானவை? என்ற கேள்வியும் எழுகிறது. இங்கு இந்த சிங்கள இராணுவத்தை அப்புறப்படுத்துவது மட்டுமே எமது நோக்கமாயின் இந்தத்தாக்குதல்கள் சரியானவையே. ஆனால் சிங்கள இராணுவத்தை அப்புறப்படுத்துவது எமக்கு விடுதலையை பெற்றுத் தந்துவிடுமா? நிச்சயமாக இல்லை. இங்கு நிலவும் பிற்போக்கு சமூகத் தளைகள், சுரண்டல் வடிவங்கள் என்பவற்றில் எதுவித மாற்றமுமில்லாத வெற்று ஆட்சி மாற்றத்தால் எதுவித பயனும் கிடைக்கப்போவதில்லை. தமிழ்ப் பிற்போக்குத் தலைமைகட்கு களம் அமைத்துக் கொடுக்கவே இது பயன்படும் என்பதில் ஐயமில்லை. எனவே எமது போராட்டம் உண்மையில் இந்த அடிப்படைப் பிற்போக்கு சமூக அமைப்பினையே மாற்றியமைக்கிற விதத்தில் இந்த விடுதலைப் போராட்டத்தை ஒரு புதிய ஜனநாயகப்புரட்சியாக முன்னெடுப்பதன் மூலமே இங்கு உண்மையான விடுதலை சாத்தியமாகும்.

மக்கள் போராட்டத்திற்குத் தயாராகாத சூழலில் தாக்குதலைத் தொடுத்தலும், மக்களைப் பாதுகாக்க முடியாது அவதிப்பட விடுவதும் மேலும் எதிரிக்கு உற்சாகத்தைக் கொடுப்பதோடு இயக்கங்களைப் பற்றி மக்களிடையே வெறுப்புணர்ச்சியை ஊட்டவுமே துணை செய்யும். ஆனால் இவை பற்றி இந்த இயக்கங்கள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. அகதிகளாகிவிட்ட மக்களுக்கு முடிந்தளவு உதவி செய்ய முயற்சிக்கும் சில இயக்கங்களின் தோழர்கள்கூட 'இவர்களுக்கு இதுதான் லாயக்கு' என்று கிண்டல் செய்யப்படுகிறார்கள். மக்களோடு மக்களாக நிற்பதன் மூலம் மட்டுமே, மக்களது துன்ப துயரங்களில் பங்கெடுப்பதன் மூலம் மட்டுமே, அவர்களைப் புரிந்து கொள்ளவும், அவர்கள் நம்பிக்கையைப் பெறவும், அவர்களைப் போராட்டத்திற்கு தயார் செய்யவும் முடியும். மக்கள் என்ற பலமான கோட்டையை நிராகரித்து எந்த நாட்டிலும் விடுதலை கிடைத்தாக வரலாறில்லை.

தற்போதைய நிலையில்—புரட்சிக்கு இன்னும் தயாராகாத நிலையில்—இத்தகைய தாக்குதல்களை மக்கள் எப்படிப் பார்ப்பார்கள்? தமது வாழ்வுக்கு அச்சுறுத்தல் நிகழப் போகிறது என்றுதான் இதைப் பார்ப்பார்கள். இந்த நிலையில் அவர்கள் இதை தடுக்க முயல்வார்கள் மக்கள் தடுக்க முயன்றால் அதற்குக் காரணம் அவர்கள் விடுதலைக்கு எதிரானவர்கள் என்பதல்ல. அவர்கள் பூரணமாக இன்னும் போராட்டத்திற்கு தயாராகாததாலேயே தடுக்க முயல்கிறார்கள். ஆனால் எமது இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்கிறார்கள் ? குண்டு வைக்க வேண்டாம் என கோரிக்கை விட்ட தனி நபர்கள் அடிக்கப்படுகிறார்கள் அல்லது துப்பாக்கி முனையில் படுக்க வைக்கப்படுகிறார்கள். இது இப்படியே நீண்டால் மக்கள் கூட்டமாக தடுக்க முயலுவும் கூடும் இது ஏன்? இராணுவத்திற்கெதிராகப் போராட வேண்டிய மக்கள், இயக்கங்களுக்கு எதிராகக் குரலெழுப்புவது எவ்வளவு வேதனைக்குரிய விடயம்...இது பற்றி இயக்கங்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

இன்று, தாக்குதல் நடந்த அல்லது நடக்கப்போகும் இடங்களைச் சூழ உள்ள மக்கள் திக்குத் திசை தெரியாது ஓடுகிறார்கள். பின் அவர்கள் வீடுகள், பாடசாலை, கோவில்கள் போன்ற இடங்களில் தஞ்சம் புகுகின்றனர்; அகதிகளாக்கப்படுகின்றனர். இவர்கள் அகதிகளாக்கப்படுவதற்குக் காரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான இயக்கங்களின் குண்டு வைப்பும், அந்த இயக்கங்களின் மக்களைச் சாராத, மக்களைப் பற்றி அக்கறைப்படாத போக்குப் பற்றிப் பார்த்தோம். இந்தப் போக்கு இவர்களை மக்களிடமிருந்து அந்நியப் படுத்துவதுடன் மக்கள் விரோதப் போக்கை வளர்க்கவும் செய்யும். மக்கள் இவர்களை எதிர்த்து நிற்கும் நிலைமையை உருவாக்கவும் செய்யும். இந்த இயக்கங்கள் இது போராட்ட காலம் என்று கூறித் தாக்குதலில் ஈடுபட்ட பின்னும் பரந்து பட்ட மக்கள் இவர்களுடன் அணிசேராமைக்கான—இன்னும் பார்வையாளர்களாக இருக்கின்றமைக்கான—காரணம் என்னவென்று பார்க்க முன்பு இந்த அகதிகள் முகாம் விடயம் எப்படி தோழர்களால் கையாளப் படுகிறது என்று பார்ப்போம். அப்போது இன்னும் தெளிவாக இந்தப் பிரச்சினையை விளங்கிக் கொள்ளலாம். இத்தாக்குதல்களைத் தொடர்ந்து உருவான அகதி முகாம்களில் உயர்சாதியினர், தாழ்த்தப்பட்டவர் என்ற வேறுபாடு காட்டப்பட்ட பல சம்பவங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இதிலே கேவலம் என்னவென்றால் போராளிகள்கூட இவ்விதம் நடந்துகொண்டதுதான். ஆயுதங்களை ஏந்தி இராணுவத்துடன் போராடி விடுவதனால் மட்டும் ஒருவர் போராளி ஆகி விடமுடியாது. உண்மையாக ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்து நின்று அவர்களது உரிமைகட்காகப் போராடுவதன் மூலமாகவே, அவர்களின் சொந்த விடுதலைக்காகப் போராடுவதன் மூலமாகவே ஒருவன் உண்மையான போராளியாக இருக்க முடியும். இதற்காக ஒருவன் ஆயுதத்தை எடுத்தால் மாத்திரமே அவன் உண்மையான போராளி என்பது நியாயமாகும். வெறுமனே ஆயுதம் தூக்குபவர்கள் எல்லாம் போராளிகளல்ல; தடியெடுத்தவர்களெல்லாம் தண்டல்காரர்களல்ல! இந்தப் போராளிகள் தலைமையில் நாளை அமையப்போகும் தமிழீழம், தமிழ் மக்களது முழுமையான விடுதலைக்கு உத்தரவாதம் செய்ய முடியுமா? இந்தப் போராளிகளின்கீழ் தமிழீழத்தில் இந்த சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் மீண்டும் துன்பத்திற்கும், ஒடுக்குமுறைச் சுரண்டலுக்கும், ஆளாவார்கள் ஆயின் இவர்கள் இந்த விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதில் எவ்வித நியாயமுமில்லை. இந்தப் போராட்டம் உண்மையான விடுதலையைப் பெற்றுத்தரப் போவதும் இல்லை. இந்த மக்களிடமிருந்துதான் கூட்டணியினர் ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை என்று கவிதை பாடியபோது 'யாரை ஆள நினைக்கிறாய்?' என்ற குரல் எழுந்தது. ஆம்! அவர்கள் குரல் நியாயமானதுதான்.

இப்போது எமது மக்கள் ஏன் எமது இயக்கங்களின் பின்னால் இன்னும் அணி திரளவில்லை என்பதையும், இன்னும் பார்வையாளர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். இங்குள்ள பிற்போக்கு தமிழ் நிலபிரபுத்துவ,முதலாளிய இலாபங்களுக்காகவே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. அல்லது இன்னும் சரியாகச் சொன்னால் சில போராட்டம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கவே பயன்படும். உண்மையான மக்களின் ஜனநாயக விடுதலைக்கான போராட்டமாக இது அமையாதவரைக்கும் மக்கள் இவர்களுடன் அணி சேரப் போவதில்லை. வெறும் பார்வையாளர்களாகவே இருப்பர்.

இங்குள்ள தமிழ்ப் பாட்டாளி வர்க்கம் இந்த விடுதலைப் போராட்டத்தில், இது பிற்போக்காளருக்குத் துணை செய்யும் தமிழீழம் என்று போராட்டத்தினின்றும் ஒதுங்கிப்போய் இருப்பதோ, அல்லது தமது வர்க்க நலனை முதன்மைப் படுத்தாமல் கண்மூடிக் கொண்டு கூலிப்பட்டாளமாக அணி சேர்வதோ பயனற்றதாகும். இரண்டுமே தவறானதாகும். பாட்டாளி வர்க்கம் இந்த வரலாற்றுப்போக்கை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால், தனது தலைமையை இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதிப் படுத்தும் விதத்தில் உறுதியாகப் போராட வேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையில் புதிய ஜனநாயகப் புரட்சியாக எமது தேசிய விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப் படுவதன் மூலமே தமிழீழத்திலுள்ள முழு மக்களதும் ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் செய்ய முடியும்; மக்களை அணி திரட்டவும் முடியும். அப்போதுதான் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையும், ஜனநாயகமும் பேணப்பட முடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகளை நிராகரிக்கும் ஜே.வி.பியின்

# மசாலவடை அரசியல்

கடந்த யூலையில், கட்சி தடை செய்யப் பட்ட கொஞ்ச நாட்களில் 16 பக்கங்கள் கொண்ட ஒரு சிறு பிரசுரம் முதலில் வெளி யிடப்பட்டது. ரேூணியோ செய்யப்பட்ட இப்பிரசுரம் 'சிறீலங்காவின் முற்போக்கான மக்களுக்கு' என வெளியிடப்பட்டிருந்தது. இது பின்வருமாறு கூறியது,

> "கடந்த காலங்களில் அமெரிக்காவிற் கும் ஈழம்அமைப்புகளுக்கும் இடையில் இருந்த தொடர்புகள் வெளித்தெரிய வந்துள்ளன. மா செ கு செட் மாநில சட்டசபையில்வெளியிடப்பட்ட 'ஈழம்' ஆதரவு கருத்துகட்கு, இந்தியாவைத் தாக்கிவரும் இந்த ஜே ஆர் ஜெய வர்த்தனவின் மந்திரிமார்களான ஆனந்த டீ அல்விசும், அத்துலத் முதலியும் மௌனம் சாதித்தே வந் துள்ளனர்."

18 பக்கங்கள் கொண்ட இன்னொரு பிரசுரம்— இதுவும் ரேூணியோ செய்யப்பட்டதே—உட் கட்சிக்கான ஒரு சுற்றறிக்கையாக வெளி யிடப்பட்டு 1971ம் ஆண்டு கிளர்ச்சியின் 13வது நிறைவு விழாவுக்காக விநியோகிக்கப் பட்டது. 'காலமும் நேரமும் யாருக்காக வும் காத்திருப்பதில்லை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரம் எல்லா ஆதரவாளர்கள், ஊழியர்கள், அங்கத்தவர் கள் ஆகியோருக்காக எழுதப்பட்டிருந்தது. வடக்கிலுள்ள எல்லா 'இனவாத' இயக்கங் களைப் பற்றியும், பயங்கரவாத நடவடிக்கை களைப் பற்றியும் தயாரிக்கப்பட்டிருந்த இப் பிரசுரம் மிகவும் திடுக்கிடத்தக்க விதத்தில் வட்டமேசை மாநாட்டை மட்டுமல்ல (இம் மாநாட்டிற்கு இவர்கள் அழைக்கப்படவில்லை என்பது இதற்கு ஒரு காரணமாகலாம்) தீர் வுக்கான எல்லாவித முயற்சிகளையும் தாக்கி யிருந்தது.

அப்பிரசுரம் சொல்கிறது,

> "தற்போது நடைபெற்றுக்கொண்டிருக் கும் வட்ட மேசை மாநாட்டின் நோக்கம் என்ன? இலங்கையில் ஒரு சமஷ்டி முறையைக் கொண்டுவந்து மக்கள் முதுகில் கட்டியடிப்பதைவிட வேறெந்த நோக்கும் இதற்குக் கிடை யாது. எந்தவிதமான பாரபட்சமு மற்ற சமமான உரிமைகள் கொண்ட ஒரு ஒற்றையாட்சி முறைதான் எமது நாட்டைப் போன்ற ஒரு சிறிய நாட் டின் சமூக வளர்ச்சிப் போக்கிற்கு மிகவும் பொருத்தமானதாகஇருக்கும். இந்தவட்டமேசை மாநாட்டின் மூலம் மாவட்ட சபையோ, மாகாண சபையோ அல்லது வேறெந்தப் பெய ரிலோ ஒரு சமஷ்டி முறை உருவாக்கப் பட்டால் ஈழம் இயக்கங்களை இது அழிக்க முடியாதென்பது மட்டுமல்லா மல், ஒரு சமஷ்டி ஆட்சி முறை கொண்ட இந்தியாவில் இன்று நடப் பது போலவே இனவாதத்தைத் தூண்டு வதாகவும், வளர்ப்பதாகவும் செயற் படும்."

கடைசியாக அரசாங்கத்தை கண்டனம் செய்யும் ஒரு அச்சடிக்கப்பட்ட துண்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ எனது வாழ்நாள் முழுவதும், தந்தை நாட்டிற்காகவும், புரட்சிக்காகவும் உள்ளத்தாலும் உடலாலும் சேவை செய்திருக்கின்றேன். இந்த உலகத்திலிருந்து நான் மறையும்போது, இன்னும் நீண்ட நாள் இருந்து மேலும் அதிக சேவை செய்ய முடியாமற்போய் விட்டதே என்பதற்காக அன்றி வேறு எதற்காகவும் வருந்தமாட்டேன்.

நான் இறந்தபின், எனது இறுதிச் சடங்குகளைப் பெரிய அளவில் செய்வது தவிர்க்கப்படவேண்டும். மக்களின் நேரமும், பொருளும் விரையமாக்கப்படாமல் இருப்பதற்காகவே இதைக் கூறுகிறேன். இறுதியாக, மக்கள் அனைவருக்கும், இராணுவத்தினர் அனைவருக்கும், மருமகன்களுக்கும், மருமகள்களுக்கும், இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் எனது எல்லை இல்லா அன்பை விட்டுச் செல்கிறேன். உலக முழுவதிலும் உள்ள நமது தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமாதான பூர்வமான, ஒன்றுபட்ட, சுதந்திர, ஜனநாயக ஒளிமயமான வியட்நாமைக் கட்டுவதற்கும், உலகப் புரட்சி இயக்கத்திற்குச் சீரிய பங்காற்றவும் நமது கட்சி முழுவதும், மக்கள் அனைவரும் தமது முயற்சிகளை இணைத்து செயலாற்ற வேண்டும் என்பதே என் இறுதி அவா.

—ஹோமிசின் அவர்களின் உயிலில் இருந்து

பிரசுரம் ஜே. வி. பி. யின் மேன தினச் செய்தியாக விநியோகிக்கப்பட்டது. அதில் :

"நாட்டின் ஒரு பகுதியைப் பிரிப்பதற்காகவும், ஓர் ஈழம் அரசை உருவாக்குவதற்காகவும் கிளர்ச்சியிலீடுபட்டுக் கொண்டும், போராடிக் கொண்டுமிருக்கும் த.வி.கூ.க்கு பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டும்; த.வி.கூ. யுடன் அரசியல் தொடர்புகளை மூடி மறைத்து செய்து கொண்டே அதை அமுக்க முயன்றுகொண்டும்; 7 பேர் கொண்ட அதன் அரசியல் குழுவில் 6 பேரையும் அதன் முழுத் தலைமைப் பீடத்தையும் தமிழ் நாட்டிற்குத் தப்பிச் செல்ல அனுமதித்தும், பிற நாட்டுத் தலைவர்களையும் அரசியல் நிபுணர்களையும் உள்நாட்டு விடயங்களில் தலையிட அனுமதித்துக் கொண்டும்..."

"மாகாண முறையையும், கோட்டா முறையையுமே தருவதாகப் பாசாங்கு செய்து ஒரு சமஷ்டி முறையை உருவாக்கும் நோக்கில் இரகசியமாக வெளிநாட்டு அரசியல் நிபுணர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்திக் கொண்டும்; வட்ட மேசை மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுகளூடாக சதித்தனமாக மக்களது தலையில் ஒரு சமஷ்டி ஆட்சியைக் கட்டியடித்து நாட்டை மேலும் பிளவின் விளிம்புக்குக் கொண்டு சென்றும்; த.வி.கூ.யை (இது நாட்டைப் பிளக்கக் கிளர்ச்சி செய்வதுடன் தனக்கென இந்த இலட்சியத்தை அடையும் நோக்கில் ஒரு ஆயுதப் படையையும் கொண்டுள்ளது) அன்பாக வரவேற்று வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்வதும்; அதற்கு அரச மந்திரி உபசரணைகள் செய்வதும்; ரெட்பாணு (Red Barna), செடெக் (Sedec) போன்ற பிரிவினைக்கு ஆதரவு தரும் வெளிநாட்டு நிறுவனங்களை(யும், அத்துடன் இவற்றுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புள்ள உள்நாட்டு நிறுவனங்களையும்) தடை செய்யாது இயங்க அனுமதித்தும்; அதே நேரத்தில் பிரிவினையை எதிர்க்கும் ஜே.வி.பி.யைத் தடை செய்தும்; த.வி.கூ.யின் திட்டத்துள் அகப்பட்டுக்கொண்டு அதனால் நாட்டைப் பிளவின் விளிம்புவரை கொண்டு சென்றுள்ளதுடன்; 'தமிழ் அரசு' எனக்கருதப் பட்டு வரும் 'தமிழ்நாடு' அரசுவிடம் வடக்கையும், கிழக்கையும் கையளித்துள்ளதும்....''

உண்மையாகவே, ஜே.வி.பி.யின் இனவாத வேர்கள் திரும்பவும் பழைய அபக்கியாதி பெற்ற 'இந்திய விஸ்தரிப்பு வாத' விரிவுரைகளை நோக்கி சென்றுள்ளது. இவர்களின் அதிருப்தியாளர்களால் வழங்கப்பட்ட ஒரு புதிய துண்டுப் பிரசுரம் 1971ற்கு முன் விஜேயவீர சொன்னதாகப் பின்வருமாறு சொல்கிறது: ''எல்லா அயல்நாட்டுத் தமிழர்களும் புரட்சிக்குப்பின் கொல்லப்படுவர்.''

கட்சி தன்னை சுயவிமர்சனம் செய்துள்ளதாயும், கடந்த 77 காலத்தில் தேசிய இனப் பிரச்சினையில் லெனினிய நிலைப்பாட்டைஎடுத்துள்ளதாயும் கூறிக்கொண்டு வெளியே வந்தது. ஆனால் அதன் நிலைப்பாட்டிலுள்ள பிரதான குறைபாட்டையும், அதன் ஆபத்தையும் அவதானிகள் சுட்டிக் காட்டினர். பத்திரிகைகளின் பத்தி எழுத்தாளர்கள் உறுதியாக அதை எச்சரித்தும், இந்த ஜே.வி. பியின் நிலைப்பாட்டிற்கு எதிராகத் தத்துவார்த்த விமர்சனங்களை முழுமையாக முன் வைத்தும் உள்ளனர்.

1982 மத்தியில் இந்த தத்துவார்த்தத் தவறுகள், முழுமையான கட்டற்ற போக்கிற்கு வழிகோலின. இது ஓரளவு 82 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில், அந்த நேரத்தில்கூட சில பின்பற்றுளர்கள் அதை ஒரு 'தந்திரோபாய அமைதி' (செவிட்டு அமைதி) என்றும் ஆத்திரமூட்டலைத் தவிர்க்கும் ஒரு நடவடிக்கை என்றும் மதிப்பிட்டபோதும் இம்முறை மேதினச் செய்தி இந்த 82ம் ஆண்டின் சந்ததியினை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இது றேகண இன்று தன்னுள் காணும் உடைவுகளின் ஒரு வடிவமே.

கெயில் ஓம்வெற் (Gail Omvedt) போன்ற மதிப்பிற்குரிய வெளிநாட்டு அவதானிகளும் இந்த ஜே.வி.பியின் நிலைப்பாட்டை விமர்சித்துக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நிலைப்பாடு நிகழ்கால அரசியலில் அதற்குள்ள சந்தேகத்திற்கிடமான உறவுகளை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

மிகவும் முக்கியமானது என்னவென்றால் லயனல் போபகே, டாக்டர் S. C. பெர்ணண்டோ போன்ற ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை தாங்கிப்பிடித்துலங்கா கார்டியனில் எழுதியவர்கள் இவ்வளவிற்கு கட்சியிலிருந்து விலகியிருப்பார்கள் அல்லது விலக்கப்பட்டிருப்பார்கள் என்பதுதான்.

லங்காகார்டியன்
01-06-1984

குறிப்பு: தென்னிலங்கை புரட்சிகர சக்திகளுடனான நேச உறவுகளை வலியுறுத்தும் நாம், இப்படிப்பட்ட இனவாத பிற்போக்கு போலி இடதுசாரிகளை இனங் கண்டு கொள்வதில் தவறிழைக்கக் கூடாது. ஜே.வி. பி. தனது ஆரம்ப நாட்களிலிருந்தே இனவாத குட்டி முதலாளிகளின் இயக்கமாக இயங்கி வந்துள்ளது. இதன் மார்க்சிச லெனினிய கோஷங்கள் எல்லாம் அசல் ஏமாற்றுகளே. ஜே.வி. பி. பற்றி தமிழ் மக்களிடையே இருக்கக் கூடிய பிரமைகளைக் களைந்து அதன் உண்மைச் சொரூபத்தைத் துகிலுரித்துக் காட்டுவதில் டயன் ஜயதிலக்காவின் இக் குறிப்பு உபயோகப்படும் என நம்புகிறோம். —இலக்கு

---

விடுதலைப் போராளிகளும்
ஏனையோரும்
அவசியம்
படிக்க வேண்டியது

**'கெரில்லா யுத்தம் பற்றி லெனின்'**

இது ஒரு
தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
வெளியீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
'அரசியற் திட்டம்' பற்றி ஓர் ஆய்வு:

# புரட்சிகர அரசியல் முதன்மை பெற

சமுத்திரன்

இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு உடனடி உந்தலாக அமைந்தது தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT)யின் அரசியற் திட்டமாகும். இந்த இயக்கம் சுருக்கமாகவும் தெளிவாகவும் தனது கொள்கை திட்டத்தை முன் வைத்துள்ளது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பிரதான சக்திகள், அதன் இலக்குகள், விடுதலை பெற்ற சமூகத்தின் முதல் கட்டத்தின் அரசியற் பொருளாதார அமைப்பு போன்றவை பற்றி இந்த அரசியற் திட்டத்தில் தெளிவாக்கப் பட்டிருப்பதால் இதை ஒரு விமர்சன ரீதியான பார்வைக்கு உட்படுத்தல் சாத்தியமாகிறது. அளவு ரீதியில் NLFT இன்னும் பாரிய இயக்கமாக மலராத போதும் இந்த அரசியற் திட்டம் சகோதர இயக்கங்களின் கவனத்தை ஈர்க்கும் என நம்பலாம். அது நம்மிடையே ஆக்க பூர்வமான விவாதங்கள், கருத்துப் பரிமாறல்கள் நடைபெற ஒரு அடிப்படையாக விளங்கவல்லது என்பது எனது கருத்து. எனவேதான் அதன் முக்கியத்துவம்NLFTயின்ஸ்தாபன வரம்புகளுக்கும் அப்பால் செல்கிறது.

NLFT அரசியற் திட்டத்தின் பிரகடனங்கள் விடுதலை போராட்டத்தின் பல அம்சங்களை தொட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் பற்றி இங்கு கருத்து தெரிவிப்பது கடினம். ஆயினும் சகல விடுதலை இயக்கங்களுக்கும் பொதுப்படையான முக்கியத்துவம் வாய்ந்த சில விடயங்கள் பற்றிய ஒரு விவாதத்தை நோக்கி சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

விடுதலை பற்றி மக்கள் சார்ந்த ஒரு முழுமையான கோட்பாடு போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களிலிருந்தே உணர்வு பூர்வமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இது சமீபத்திய தசாப்தங்கள் நமக்குத் தரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாடமெனலாம். போல்ஷவிக் புரட்சியிலிருந்து சமீபத்திய சிம்பாப்வே, நிக்கராகுவா புரட்சிகள் வரை விடுதலையின் கருத்து ரீதியான, கொள்கை ரீதியான அர்த்தங்கள், விளக்கங்கள் என்பனவற்றிற்கும் நடைமுறைக்குமிடையே பல முரண்பாடுகள் இருப்பதைக் காண்கிறோம். புரட்சிக்குப் பின் தோன்றிய அரசின் தலைமைகள் பல சந்தர்ப்பங்களில் இந்த முரண்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்குப் பதிலாக அவற்றை மூடி மறைத்தோ அல்லது அவற்றிற்கு தம் வசதிக்கேற்ற போலி விளக்கங்களைக் கொடுத்தோ (இதற்கு மார்க்சையும் லெனினையும் மேற்கொள் காட்டுவதும் வழக்கமாகிவிட்டது) நிலைமைகளை நியாயப்படுத்தி வந்துள்ளன. காலப்போக்கில் தவறான—விடுதலை விரோதமான—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகள் ஸ்தாபன ரீதியான பலம்பெற்று சமூக நியதிபோல் ஆகிவிடுகின்றன.

மூன்றும் உலக விடுதலைப் போராட்டங்களில் மக்கள் எண்ணற்ற தியாகங்களை செய்திருக்கின்றனர்; செய்து வருகின்றனர். ஆயினும் புரட்சிகர அரசியல் மாற்றத்தின்பின் மக்களின் விடுதலை ஆவல்களுக்கு, அபிலாஷைகளுக்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுக்கும் சமூக உறவுகளை, ஸ்தாபனங்களை உருவாக்குவதில் எல்லா புரட்சிகளும் பல தோல்விகளைச் சந்தித்திருக்கின்றன. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கட்டத்தில தொழிலாளர், விவசாயிகள், பழைய சமூக உறவுகளினுல் நசுக்கப்படுவோர், மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகள், நடுத்தர வர்க்கத்தினர் புதிய சமூகம் பற்றி பல கனவுகளைக் கட்டி எழுப்புகின்றனர். இவை இயக்க ரீதியான அரசியல் கல்வியாலும் அவரவர் அபிலாஷைகளாலும் உருப்பெறுகின்றன.

ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதென்பது இப்போதுள்ள ஒடுக்கும் சக்திகளை தூக்கியெறிவது மட்டுமாகாது. புதிய அமைப்பு ஒடுக்குமுறைத் தன்மைகள் தோன்ருது, வளராது இருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இந்த வழிவகைகள் விடுதலைப் புரட்சியின் காலத்திலேயே உயிரூட்டமாக மக்கள ஸ்தாபனங்களில் இணைய வேண்டும். இப்போ நடைமுறையிலிருக்கும் சோஷலிச அமைப்புக்களைப் பார்க்கும்போது இந்தக் கருத்து அடிப்படையான முக்கியத்துவம் பெறுகிறது. விடுதலை என்பது மக்கள் உணர்வு பூர்வமாக நடத்தும் ஒரு மாபெரும்நீண்டபயணம். அதற்கு வரலாற்றுக் கட்டங்கள் இருக்கலாம். ஆனுல் ஒரு இறுதி முற்றுப்புள்ளி கிடையாது.

தமிழ் மக்கள் விடுதலை பற்றி கொள்கை ரீதியில் சிந்திக்கும்போது இந்த வரலாற்றுப் பாடங்களை மனதில் நிறுத்தல் அவசியம். NLFTயின் அரசியற் திட்டத்தில் நேரடியாக இவை குறிப்பிடப்படாத போதும் அதன் ஆக்கத்தில் இவை பற்றிய கவனம் இருந்திருக்கலாம் என நம்ப முடிகிறது. NLFT சுதந்திர ஈழத்தின் ஆரம்பக் கட்டத்தை பின்வருமாறு விளக்கியுள்ளது.

> "சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட மக்கள் ஜனநாயக சமூக அடிப்படையிலான தமிழீழ மக்கள் குடியரசை அமைத்தல்."

இதன்படி ஈழ விடுதலைப் புரட்சி உடனடியாக மக்கள் ஜனநாயக அமைப்பொன்றினை உருவாக்க வேண்டும். எங்கும் "சோஷலிச ஈழம்" என்பதே பேச்சு. பல இயக்கங்கள் இதையே உடனடி இலக்கெனக் கூறுகின்றன. சோஷலிசமே நமது இலட்சியமாக இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனுல் சோஷலிசத்தை எப்படி விளக்குவது?

சோஷலிசம் = அரசுடைமை + கட்சித் தலைமையின் மையவாதம் என்பதா?

அரசுடைமையாக்கலாலும், சட்ட மூலம் சந்தையை கடதாசியில் இல்லா தொழிப்பதாலும்,கட்சியின் தலைமையாலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனப்படுவது பிறந்து விடுமா? இது போன்ற அமைப்புக்களில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் உயிரூட்டமான அம்சமான பாட்டாளி வர்க்க ஜனநாயகம் தோன்றி வளர முடியுமா?

கடந்த 67 வருட நடைமுறை சோஷலிசத்தின் வரலாற்றை நாம் காணுமல் விமர்சனத்துக்குள்ளாக்காமல் விடமுடியாது. அப்படி நோக்கும்போது பின்தங்கிய நாடுகளில் சோஷலிச நிர்மாணமென்பது சுலபமான காரியமில்லை. உற்பத்தி சக்திகளே சர்வமும்என்ற வாதம் தவருனது. ஆனுல் அதே நேரத்தில் அவற்றிற்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை கொடுக்காது சோஷலிச மாற்றம் பற்றிப் பேசிப் பயனில்லை.

இலங்கை ஒரு குறைவிருத்தி அமைப்பைக் கொண்டது. அதிலும் தமிழ்ப் பிரதேசங்கள்—அதாவது தமிழ் ஈழம்—நீண்டகாலமாகத் புறக்கணிக்கப்பட்ட பகுதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, மூலதனக் குவியல் மிகவும் குறைவு. நமது சமூகத்தின் வர்க்க உருவாக்கத்தின் போக்குகள், மட்டங்கள் இதை நன்கு பிரதிபலிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் பணப் புழக்கம் இருக்கும் அளவிற்கு உற்பத்தி மூலதனம் வளரவில்லை. இதுகுறை விருத்தியின் பொது அம்சம். கிழக்கு மாகாணத்து நிலைமைகள் இன்னும் பின்தங்கியது. இதனால் சமூக மயப் படுத்தப்பட்ட நகர்ப்புற தொழிலாள வர்க்கம் வளரவில்லை. தமிழ்ப் பிரதேசங்களின் தொழிலாளர்களில் பெரும்பங்கினர் தனித்தனியானோரே. தொழிற் போக்கினால் சமூகரீதியில் ஒருங்கிணைக்கப்பட்டவர்க்கமாக் கப்படும் நிலைமைகளை அடையாதோர், சிறுபண்ட உற்பத்தி நிறுவனங்களில் வேலை செய்வோர்.

இந்த சிறுபண்ட உற்பத்தியே நமது விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் வர்த்தகத் துறைகளின் முதலாய மிகப்பரந்த குணும்ச மாகிறது. இந்தக்கட்டத்திலிருந்து சோஷலிச உற்பத்தி உறவுகள், சோஷலிச நிர்வாக அமைவுகள் கொண்ட ஒரு அமைப்புக்குத் திடீரெனப் பாயமுடியாது. அது நடைமுறையில் அதிகாரவாத உறவுகள் மிகுந்த ஒரு சமூகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் பின் உற்பத்தி சக்திகளின் ஸ்தம்பிதத்திற்குமே வழிவகுக்கும். இது வரலாறு தரும் பாடம்.

சுருங்கக் கூறின் ஈழத்தின் குறைவிருத்திப் பொருளாதார சமூகநிலைமைகள் சில இடைக் காலக்கட்டங்களை (Transitional Stages) அவசியப்படுத்துகின்றன. இவைசரியாகக் கிரகிக் கப்படா விடில் சோஷலிசம் என்ற ஒரு தெளிவற்ற கருத்தமைவு ரீதியான (Ideological) சுலோகத்தின் பெயரில் நாம் பல சோஷலிச விரோதத் தவறுகளை விடநேரிடும் உண்மையான, விஞ்ஞானபூர்வமான சோஷலிசத்தில் நம்பிக்கை கொண்ட இயக்கங்கள் இத்தகைய தவறுகளை விட நியாயமில்லை.

இங்கு விடுதலைக்கும் — பொருளாதார வளர்ச்சிக்குமிடையிலான முரண்பாடு முக்கியத்துவமடைகிறது. மனிதரின் ஆக்கசக்தியினதும் அவர்களின் தன்மை ரீதியான ஆளுமையினதும் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய அதே நேரத்தில் சகல பொருளாதாரத் துறைகளிலும் உற்பத்தி சக்திகளை வளர்க்கவல்ல உற்பத்தி உறவுகளை உருவாக்க வேண்டும். இந்த முரண்பாட்டை நீண்டகால நோக்கில் கையாளுதல் அவசியம். அத்துடன் இந்த முரண்பாட்டைக் கையாள்கையில் வெறும் சோஷலிச அபிவிருத்தி வாதப் போக்கில் நிலைமைகளையும் எதிர்காலத்தையும் ஆராய்வதையும் தவிர்க்கவேண்டும். இப்போதைய கட்டம் சிங்கள இராணுவத்தை எப்படியும் வெளியேற்றல், மற்றவை பின்னர் என்றும், பின்னர் (சிங்கள இராணுவத்தை வெளியேற்றி விட்டோம் என வைத்துக்கொள்வோம்) இப்போது உடனடித் தேவை பொருளாதார வளர்ச்சி மற்றவை (ஜனநாயக உரிமைகள், புதிய கலாச்சார உற்பத்தி போன்றவை) அடுத்த கட்டத்தில் என்றும் பிரித்துப்பார்க்கும் பார்வை இராணுவ வாதம், பொருளியல் வாதம் என்பனவற்றின் பிரதிபலிப்புக்களே ஒழிய சோஷலிசப் புரட்சியின் தன்மைகள் அல்ல. வெகு ஜனங்கள் சார்ந்த இயக்கங்கள் இத்தகைய சிந்தனைகளைக் கொண்டிருக்க முடியாது.

மக்கள் ஜனநாயக இடைக்கால நோக்கில் விடுதலைப் போராட்டத்தை அணுகும்போது விடுதலை — பொருளாதார வளர்ச்சி என்ற இயங்கியல் உறவின் தன்மைகள் தெளிவாகின்றன. தனித்தனியாக இயங்கும் சிறுபண்ட உற்பத்தி அமைவுகளின் சமூக ரீதியான சீர் திருத்தத்தின் உடனடி நோக்கம் சந்தையின் பங்கினை முற்றாக இல்லாதொழிப்பதல்ல. அது நடை முறையில் சாத்தியமற்றது. இங்கு வேலைத் திட்டங்களில் முக்கிய அடிப்படைகள் ஜனநாயகமயப்படுத்தல், கூட்டுறவு அமைவுகளை அடிமட்டத்திலிருந்து படிப்படியாக உருவாக்கல், இவற்றிற்கிணைந்த கலாச்சார விழுமியங்களை உள்வாரிப்படுத்தும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஆகியன எனலாம். இவை எல்லாமே கிராமிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்புற பகுதிகளின் உறவுகளிலிருந்து நாட்டின் அரசியல் நிர்வாகம் வரை தொடர்புள்ளவை. புதிய சமுதாயத்தின் உற்பத்தி தேவைகளை இனங்காணுதல் வேண்டும். இவை மக்களின் தேவைகளாக எழவேண்டும். இவற்றில் அரசியல் கலாச்சார அடிப்படைகள், விழுமியங்கள் மக்களின் அபிலாஷைகளின் அம்சங்களாக வேரூன்ற வேண்டும். "சோஷலிச" அபிவிருத்திவாதிகள் இதையெல்லாம் வெறும் கருத்து முதல்வாதம் என்று தட்டிக் கழித்து விடுவார்கள். இது புதிய ஆளும்குழுக்களின் மேலாதிக்கத்தையும் அவர்கள் கட்டவிழ்த்து விடும் அதிகாரவாதத்தையும் நியாயப்படுத்த ஒரு சுலபமான வழியாகி விடுகிறது.

பின்தங்கிய ஈழப் பொருளாரத்தை மக்கள் ஜனநாயக விழுமியங்களமைந்த ஒன்றாக மாற்றியமைப்பது எப்படி என்பது இன்னமும் விடுதலை இயக்கங்கள் மத்தியில் விவாதிக்கப்படாத ஒருவிடயமாகும். பலர் நமக்குச் சுலபமாகக் கூறுவது சோஷலிசம் பற்றியே. ஆயினும் ஈழத்தின் சோஷலிசம் பொருளாதார அமைப்பு எப்படி இருக்கும் என்பது பற்றிய விளக்கங்கள் இல்லை. எனது அபிப்பிராயத்தில் மக்கள் ஜனநாயக இடைக் காலம் (இதுமிக நீண்டதாக இருக்கலாம்) பற்றிய ஆழ்ந்த கொள்கை ரீதியான, நடைமுறை சார்ந்த கிரகிப்பும் விளக்கமும் இன்றி சோஷலிச ஈழம்பற்றிப் பேசமுடியாது இப்படி நான் கூறுவது சோஷலிசம்தான் இறுதிக் கட்டம் என்ற கருத்தில் இல்லை அதுவும் ஒரு இடைநிலைக் கட்டம்தான். ஆயினும் அதன் ஆரம்ப நிலைக்கு வேண்டிய உற்பத்தி சக்தி சார்ந்த, உற்பத்தி உறவுகள் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் கட்டம் பற்றியே இங்கு நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

பண்ட உற்பத்தி முக்கியத்துவம் பெறும் வரை, உழைப்பாளர் அந்நியமயமாக்கலுக்கு உள்ளாகும் வரை சோஷலிச நிர்மாணம் பற்றிப் பேசமுடியாது. சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை திருப்திகரமாக உற்பத்தி செய்யும் சமூக, பொருளாதார ஆற்றல் மிகுந்த அமைவுகள் இல்லாதவரை சந்தை உறவுகளை வெறுமனே சட்டத்தால் அழித்து விட முடியாது. குறைவிருத்தி சமூகங்களின் புரட்சி இந்தக் காரணங்களால் பல சவால்களை எதிர்நோக்குகிறது. இவற்றுக்கு சில கம்யூனிஸ்ட்கட்சிகள் மேலெழுந்தவாரியான தீர்வுகளை முன்வைத்து தோல்வி கண்டுள்ளன.

சமச் சீரற்றதுமாய் குறைவிருத்தி மிகுந்ததுமாய் இருக்கும் தமிழ் ஈழப் பொருளாதாரத்தின் புரட்சிகர மாற்றம் பல்வேறு உற்பத்தி உறவுகள் கொண்ட ஒரு நிலைக்கே உடனடியாக எடுத்துச் செல்லும். இந்த மக்கள் ஜனநாயக கட்டத்தில் சில துறைகளில் தனியார் சிறுஉற்பத்தியும் வேறு சிலவற்றில் தனியார் — அரசு இணைந்த உற்பத்தியும் முக்கியத்துவம் பெறலாம். அரசுடைமையும் கூட்டுடைமையும் சிலதுறைகளில் முக்கியத்துவம் பெறும். இவற்றின் தேர்வு பல அரசியல், பொருளாதார. தொழில் நுட்ப, இயற்கை காரணங்களால் நிர்ணயிக்கப்படும்.

இங்கு முக்கியமானது என்னவெனில் இவற்றையெல்லாம் சோஷலிச ஆரம்ப நிலைக்கு ஏற்ற வகையில் நெறிப்படுத்தி வழி நடத்தும் ஸ்தாபன ரீதியான வழி முறைகளாகும். இங்கேதான் சரியான அரசியலின் மேலாதிக்கம் எப்போதும் வேண்டும். இதுவே சோஷலிச அரசியலின், கல்வியின், கலாச்சாரப் புரட்சியின் சவால். இதைச் சாதிக்க பரந்த, நீண்ட பார்வைகொண்ட புரட்சிகர அரசு வேண்டும். இதனால்தான் சோஷலிசப் புரட்சி ஒரு தொடர்புரட்சியாக நிரந்தரமாக இயங்கவேண்டும். மார்க்ஸ் புரட்சியின நிரந்தரம் பற்றிக்கூறிய கருத்தும், லெனினின் தொடர் பகுப்புரட்சிக்கோட்பாடும், மாவோவின் தொடர்ச்சியான புரட்சிக் கோட்பாடும் இந்தப்பார்வையிலேயே நமது நிலைமைகளுக்குப் பிரயோகிக்கப்பட வேண்டும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் கட்டங்களை NLFT தற்காப்பு, தாக்குதல், உள்நாட்டு யுத்தம் என மூன்றாகப் பிரித்துள்ளது. உள்நாட்டுயுத்தம் எனும் கட்டத்திற்கான ஆயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு பொருளாதார சுய சார்புத்திட்டத்தையும் கொண்டிருக்க வேண்டும். வேறு பல நாடுகளின் உள்நாட்டு யுத்த அனுபவங்களிலிருந்து, குறிப்பாக தோல்வி கண்ட புரட்சிகளின் அனுபவங்களிலிருந்தும், இன்று தமிழ் ஈழத்தில் ஏற்கனவே தலையெடுக்கும் சில பிரச்சனைகளிலிருந்தும் நாம் சில பாடங்களைப்படிக்கத்தவறக் கூடாது

உள்நாட்டு யுத்தமிடம்பெறும்போது பொதுமக்களின் அன்றாட வாழ்வு முற்றாகச் சீர்குலைக்கப் படுகிறது அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பெறுதல் — குறிப்பாக மிகவும் அடிப்படையான உணவு, உடை, மருந்துகள் போன்றவை மிகவும் கடினமாகிறது. இந்த நிலையில் சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளின் வெளிப்பாடுகள் பல வடிவங்களைப் பெறுகின்றன. உதாரணமாக பாசிசம் வெற்றி கொண்ட நிலமைகளிலெல்லாம்(இங்குஇத்தாலி,ஸ்பெயின் போன்றநாடுகளையும் சமீப காலத்தில் பல மூன்றும் உலக நாடுகளையும் மனதிற்கொள்ளலாம்)நடுத்தர சக்திகள்பாசிசத்தின்பக்கமே சென்றன. இந்த நடுத்தர சக்திகளே அதன் வெகுஜன அடிப்படையாகியது. அத்துடன் நம்பிக்கையிழந்த நிலையில் கீழ்மட்ட வர்க்கத்தினர் நியதிவாதத்திற்குப்பலியானூர்கள். சமூகசக்திகளின் சமன்பாடு எதிர்ப்புரட்சிக்கு சாதகமாகியது. ஆரம்பக்கட்டத்தில் நம்பிக்கையுடன் முன்னேறிய புரட்சி, எதிர்ப்புரட்சியினுல் தோற்கடிக்கப்பட்டது. எனவேஉள்நாட்டுயுத்தத்தின்விளைவு எப்படி அமையும் என்பதை ஆரம்ப நிலைகளை வைத்துச்சொல்வது சுலபமில்லை போதியளவு அரசியலுணர்வும், ஸ்தாபனமயமாக்கலும், அடிப்படைத் தேவைகளில் ஆகக்குறைந்தளவு பூர்த்தியும் இல்லாத நிலையில் பரந்துபட்ட சமூகப்பிரிவுகள் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர், சிறுஉற்பத்தியாளர்கள், அடக்குமுறை போதாமை போன்றவற்றின் பயங்கரத்தாலும், விடுதலை இயக்கத்தின் தீவிரவாதத்தினுலும்,மக்களிடமிருந்து பிரிந்து செயல்படும் இராணுவவாத போக்குகளினுலும் எதிர்ப்புரட்சியின் பக்கம், பாசிசத்தின் பக்கம் போய்விடும் அபாயம் எப்போதும் உண்டு.

வரலாறு மீண்டுமொருதடவை புரட்சிக்கு அதே சந்தர்ப்பத்தைக் கொடுப்பதில்லை என்பது பொது விதி. உள்நாட்டு யுத்தம் விடுதலைக்கு வழிவகுக்குமா அல்லது அது நீண்டகால பாசிசத்தின் ஆரம்ப நாடகமா என்பதை அரசியல் மயப்படுத்தப்பட்ட சமூக சக்திகளின்பலமும் பலவீனமும்தான் நிர்ணயிக்கும். புரட்சிவாதிகளுக்குக் கனவுகள் வேண்டும். ஆனுல் அவர்கள் கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாது.

தமிழீழ மக்கள் ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்ப நிலைகளின் தாக்கங்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். அரச பயங்கரவாதத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள முடியாத நிலை மட்டுமன்றி சிங்கள அரசின் பொருளாதார ரீதியான துண்டிப்பையும் தாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். ஆனுல் இராணுவ நடவடிக்கைகளில் தீவிரமாக செயல்படத் தொடங்கியுள்ள விடுதலை இயக்கங்கள் இந்த நிலமைகளின் அதிபாதகமான தாக்கங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய வேலைத்திட்டங்களை இதுவரை நடைமுறைப் படுத்தவில்லை. தெற்கிலிருந்து சிங்கள இனவாத அரசின் ஸ்தாபனங்களுக்கூடாகவும் தனியார் துறைக் கூடாகவும் வரவேண்டிய அத்தியாவசியநுகர் பொருட்களின் போதாமை நிரந்தர பிரச்சனையாகி விட்டது. வெளியேயிருந்து வரும் காசோலைகளைப் பணமாக்கமுடியாத நிலைமை. இந்தநிலை நமது பொருளாதாரத்தின் சுயசார்பற்ற தன்மைகளையும், அடிப்படைப் பலவீனங்களையும் வெளிப்படுத்துவது மட்டுமன்றி இதற்கு மாற்று வழியை நாம் இயக்க ரீதியில் காணுத பட்சத்தில் இதுவே நமது மக்களின் திடத்தையும் ஆர்வத்தையும் உடைக்கவல்ல ஆயுதமாக எதிரியினுல் பயன்படுத்தப்படும். மாற்றுவழி இல்லாத பட்சத்தில் மக்களின் நம்பிக்கை படிப்படியாக மழுங்கிமறைந்துவிடும் ஆபத்து உண்டு. இது ஒரு கசப்பான ஆனுல் மறுக்க முடியாத உண்மை.

உள்நாட்டு யுத்தத்தை விடுதலைப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்ல சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்திட்டம் மட்டும் போதாது. ஒரு யுத்தகால சுயசார்புப் பொருளாதாரத் திட்டமும் வேண்டும். மக்களின் அத்தியா வசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்ல வழிகள் பற்றி இயக்கங்கள் சிந்தித்துச் செயலாற்றாத பட்சத்தில் தமிழ் சமூகத்தின் குட்டி முதலாளித்துவ அம்சங்கள் மேலோங்கி விடுதலைப் போராட்டத்திற்கு உள்ளார்ந்த எதிர்ப்பு சக்திகள் வளரக்கூடிய ஆபத்தை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது. ஆகக் குறைந்தபட்சம் உணவு உற்பத்தி, பங்கீடு பற்றிய ஒரு யுத்தகால சுயசார்புத்திட்டம் உடனடியாக வகுக்கப்பட்டு அமுலாக்கப் படுதல் அவசியம். விடுதலை இயக்கங்களின் தலைமையில் உணவு அடிப்படை பரந்த அளவில் ஸ்திரமாக்கப்பட்டால் விடுதலைப் போரின் பரந்த வெகு ஜன அடிப்படையை எதிரி உருக்குலைப்பது கஷ்டம்.

ஆகவே இராணுவத்திட்டம்—யுத்தகால பொருளாதார சுயசார்புத்திட்டம்—வெகு ஜன அணி திரட்டலுக்கான புரட்சிக்கரக் கலாச்சாரத்திட்டம் இவை மூன்றையும் ஒன்றிணைத்து தன் கட்டுப்பாட்டில் வழி நடத்த வல்ல அரசியலே விடுதலை அரசிய லாகும்.

தெளிவான அரசியலுக்குக் கீழ்படுத்தப் பட்ட இத்தகைய ஒருங்கிணைந்த பன்முக ரீதியான புரட்சிகர திட்டம் வெகு ஜனங் களின் பங்கு பற்றலை பல மட்டங்களிலும் அவசியப்படுத்தும். உதாரணமாக சிறு உற்பத்தியாளர்களான நமது விவசாயி களையும்; மீனவர்களையும் புரட்சிகர யுத்த கால சுயசார்பு உணவு உற்பத்தித் திட்டத் திற்கு அணி திரட்டுவது பெரும் அரசியல் வேலையாகும். இது உற்பத்தியின் சமூகத்

---

**'' திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தால் தமிழ்ப் பெண்கள்மீது சிங்களக் கரம் படுமா? ''**

# உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கேள்வி

இலங்கையில் ஓட்டுப் பொறுக்கி 'வியாபாரம்' செய்து பழக்கப்பட்ட பாராளுமன்ற வாதிகள் இங்கும் வந்து தங்களுடைய அரசியல் வங்குரோத்துத்தனத்தை காட்டியுள்ளனர். இவர்கள் இங்குள்ள பல தேர்தல் மேடைகளில் தமிழ் ஈழத்தின் 'கௌரவப்' பேச்சாளராகி விட்டனர்! தமிழ் ஈழப் போராட்டம் என்றாலும் சரி, அங்குள்ள மக்களைப் பாதுகாப்பதென் றாலும் சரி, அந்த மக்களை அணி திரட்டி சரியானதொரு அமைப்பை உருவாக்கி ஆயுதம் ஏந்துவதன் மூலமே சாத்தியமாகும் என்பதை இந்த புளுகு மூட்டைகள் நன்றாக உணர வேண்டும். இதேபோல்தான் தமிழ் ஈழத்திற்கு மக்களிடம் அனுமதி பெறுவதற்காக நடை பெற்ற தேர்தலிலும் இந்த 'வியாபாரிகள்', மரம் பழுத்தால் வௌவால் வரும் என்றும் தனியான சபை அமைப்போம் என்றும் மக்களை இனவெறியூட்டி வாக்குகளைப் பெற்று தங்களுடைய சுரண்டலுக்கு வழி வகுத்துக் கொண்டார்கள். இப்போது தமிழீழ மக்கள்முன் தங்களது சுயரூபம் அம்பலமாகிவிட்டதால் வாக்கு சீட்டு வியாபாரம் செய்யமுடியாது இங்கு வந்து மீண்டும் முழக்கமிடுகிறார்கள்: இவர்கள் ஒன்றைமட்டும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் ஈழப் போராட்டம் என்பது வேறு, தமிழக, இந்திய மக்களுடைய ஆதரவைப் பெறுவது என்பது வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது. இலங்கையில் பாராளுமன்றம் மூலம் மக்களைச் சுரண்டுவதற்கு வாய்ப்பில்லாவிட்டால் இங்குள்ள மக்களையும் சுரண்டுவதற்கு எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. பதவியையோ கேட்டுப் பெற்றுக் கொள்ளலாமே! அதை விடுத்து தமிழீழப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த வேண்டாம்.

மேலும் சிங்கள இன வெறியன் சிறில் மத்தியு சிங்கள மக்களிடம் இன வெறியை ஊட்டுவதற்கு எப்படிப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளானோ அதே பாணியில் இந்தக் கவிஞரும் தமிழகத்தில் வந்து இனவெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, தமிழீழ மக்களையும் தமிழக மக்களையும் ஏமாற்ற வேண்டாம்.

*(மேற்குறிப்பிட்ட காசி ஆனந்தனின் பேச்சு தமிழ் நாட்டில் வெளிவரும் 7-12-84 தினகரன் பத்திரிகையை ஆதாரமாகக் கொண்டது.)*

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகளைப் படிப்படியாக மாற்றும் வேலையை மக்களின் பங்குபற்றலுடன் சாத்வீகமாகச் செய்யும் வாய்ப்பினையும் தருகிறது. இதற்கு உடனடி உந்துகோலாக இருப்பது யுத்தகாலத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளாகும்.

இந்த நோக்கில் நாம் செயல்படுவோமாயின் எதிரி விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்கப் பயன்படுத்தும் ஆயுதத்தை நாம் அவனைத் தோற்கடிக்கும் ஆயுதமாக மாற்ற முடியும். அடக்குமுறை — விடுதலை எனும் முரண்பாட்டில் விடுதலை, அதாவது மக்கள், வெற்றிபெற இத்தகைய தேவைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அரசபயங்கரவாதம், பொருளாதாரச் சீர்குலைவு போன்றவை மக்களின் கணிசமான பிரிவினரைப் புரட்சிகரத் திட்டங்களுக்கு வென்றெடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தை இன்று கொடுக்கின்றன — இதை இப்போது கைப்பற்றாவிடில் மக்களின் அக நிலை எப்படி மாறும் என்பதைக் கூற முடியாது இதற்கு பிரேதச ரீதியான, கிராம ரீதியான ஸ்தாபனங்களும் நடைமுறைக்கேற்ற வேலைத் திட்டங்களும் வேண்டும். இது நமது விடுதலை இயக்கங்களின் கவனத்தை மிகவும் ஆழமாக ஈர்க்க வேண்டும். ●

சமுத்திரனின் இவ்வாக்கத்தில் உள்ள கருத்துக்களை "இலக்கு" பூரணமாக ஏற்றுக் கொள்கிறது.

---

**கல்யாணசுந்தரமும்**

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியீடும்

இந்திய கம்யூனிஸ்ட்கட்சி தலைவர்களில் ஒருவரான எம். கல்யாணசுந்தரம் அவர்களின் பவள விழாக்கொண்டாடப்பட்டதும் அதற்காக 'குற்றவாளிக் கூண்டில் ஜெயவர்த்தனா அரசு' எனும் கல்யாணசுந்தரம் அவர்களின் உரையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப் பிரிவினர் நூலாகதமிழ்நாட்டில் வெளிக்கொணர்ந்திருப்பதையும் தமிழீழ மக்கள் அறிந்திருப்பார்களோ என்னவோ தெரியாது. இதனைமுழுமையாக விமர்சித்து இடத்தை வீணடிப்பது அவசியமற்றதாகையால் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறோம்.

கல்யாணசுந்தரம் அவர்களும், அவரது கட்சியும் மிக அண்மைக்காலம் வரைக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கொ சார்பு) சிங்கள இனவாதத்திற்கு சார்பான கருத்துக்களையே நியாயப்படுத்தி வந்ததை நாம் அவ்வளவு இலகுவில் மறந்து விடமுடியுமா? இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சகல மாநாடுகளிலும் இவரது கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் அங்கு எடுக்கப்பட்ட பெருமினவாதத்திற்கு சார்பான சகல முடிவுகளையும் அங்கீகரித்திருக்கிறார்கள் என்பதை பழைய வரலாற்றைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா, படைவரிசைக்கு... சொல்லும் ஆலோசனையைப் பாருங்கள்.

"இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும், பரந்துபட்ட மக்களிடமும் கம்யூனிசக் கருத்துக்களை ஆழவிதைக்கும் பணியில் நீண்டகால அனுபவம் கொண்டவர் தோழர் எம். க. (கல்யாண சுந்தரம்).

தோழர் அவர்களின் புரட்சிகர அனுபவங்கள், தொழிலாளர் வர்க்கஆட்சியதிகாரத்தை இலக்காகக் கொண்டு சர்வதேசமெங்கும் போராடும் படைவரிசைகள் சுவீகரித்துக் கொள்ள வேண்டியவையாகும்."

இந்தியத் தொழிலாளர்களை வெறும் பொருளாதாரப் போராட்டத்துடன் முடக்கி தொழிற்சங்கச் சீர்திருத்தவாதப் போக்கில் கொண்டுபோய் துரோகமிழைத்ததையா கம்யூனிசக் கருத்துக்களை ஆழ விதைத்தது என்கிறார் தோழர் பத்மநாபா? இதனையே நாமும் பின்பற்ற வேண்டுமா? இதனையா தோழர் பத்மநாபா பின்பற்றப் போகிறார்?!

திராவிட நாடு கோரிக்கை எழுந்தபோது, ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த போது கல்யாணசுந்தரம் எப்படித் தொழிற்பட்டார் என்பதை தமிழக மக்கள் அறிவர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை எப்போதாவது கல்யாண சுந்தரம் ஆதரித்தாரா என்பதை அலசிப் பார்க்குமாறு தோழர் பத்மநாபாவை தாழ்மையுடன் கேட்கிறோம்.

மேலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அனுபவமுள்ள உலகத் தலைவர்களின் அனுபவங்களிலிருந்தே போராடும் படை வரிசைகள் அனுபவங்களை சுவீகரித்துக்கொண்டதாக நாம் அறிந்துள்ளோம். பாராளுமன்ற அரசியல்வாதியானஎம். கல்யாண சுந்தரத்திடமிருந்து படை வரிசைகள் சுவீகரித்துக்கொள்ள ஏதும் இருப்பதாக நாம் அறியவில்லை. தோழர் பத்மநாபா மேலும் தெளிவாக படை வரிசைகள் கற்றுக்கொள்ள வேண்டியதைக் குறிப்பிட்டால் நாமும் 'கற்று'க்கொள்ள இலகுவாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் வரலாறு

கடந்த சில வருடங்களாக தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்டு வந்தநாம், காலத்தின் தேவை கருதி 1983 செப்டம்பரில் எம்மைப் புனரமைத்து தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) எனும் பெயரில் செயற்பட ஆரம்பித்தோம். அன்றைய சூழ்நிலையில் சில நடைமுறைத் தேவையையொட்டி எமது கடந்த காலம்பற்றியோ, எமது தோற்றுவாய் பற்றியோ திட்டவட்டமாக மக்கள்முன் வைக்க முடியவில்லை. எமது வரலாறு, கடந்தகால அனுபவங்கள் என்பவை பற்றி மக்கள் முன் வைக்க வேண்டிய அவசியம் எமக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்பை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது. எம்மைப் பற்றிய சந்தேகங்களைத்தெளிவு படுத்தவும் சில இயக்கங்களின் தவறான பிரச்சாரத்தை முறியடிக்கவும் வேண்டி மக்கள் முன் எம்மைப் பற்றி தெளிவுபடுத்த விழைகிறோம்.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கும்போது தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன்பின் இளைஞர்களால் தமிழீழம் என்னும் கோரிக்கை முன் வைக்கப்பட்டு அது பிரபல்யமானது. இக்கோரிக்கை பிரபல்யமடைவதைக் கண்ணுற்ற தமிழ்ப் பாராளுமன்ற அரசியற் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்பவை இணைந்த கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன் வைத்தது. இதனால் தமிழீழம் எனும் கருத்து மக்களிடையே மென்மேலும் வலுப் பெற்றது. இத்துடன் கூடவே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையும் மேலும் அதிகரித்தது. தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்ததைத் தொடர்ந்து இடதுசாரி இயக்கங்களிலிருந்த, முன்பு சிந்திக்காத பலரும் இவ்வேளையில் தேசிய இனப் பிரச்சினை பற்றி சிந்திக்கத் தலைப்பட்டனர். பலரது கவனமும் தேசிய இனப் பிரச்சினையின்பால் ஈர்க்கப்பட்டது. இக்கட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா. லெ.)யில் இருந்த பல தோழர்களிடையும் தேசிய இனப் பிரச்சினையின்பால் கவனம் திரும்பியது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது பற்றிய சர்ச்சைகள் உருவாகின. நாட்டின் யதார்த்த நிலையில் தமிழ் மக்களுக்கான ஒரு தனியான அமைப்பு உருவாகுவதும், அதன் வழிகாட்டலில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படுவதும், காலத்தின் தவிர்க்க முடியாத தேவையெனும் கருத்து, மறைந்த தோழர் கார்த்திகேசனால் முன்வைக்கப்பட்டது. கடந்த காலங்களில் இடதுசாரி இயக்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான சரியானதொரு தீர்வை முன்வைக்கவில்லை. அதுமட்டுமல்ல, அவர்களும் கூட பாராளுமன்ற அரசியற் சேற்றில் மூழ்கி இனவாத நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் தமிழ் மக்கள் இடது சாரிகளை நம்பும் நிலையில் இல்லையெனும் கருத்தும், இரு இனங்களுக்குமிடையில் குரோதம், தமிழ், சிங்கள முதலாளித்துவக் கட்சிகளினால்வளர்க்கப்பட்டு பரஸ்பர நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது எனும் கருத்தும், மற்றும் நாட்டில் பலமான புரட்சிகர இயக்கமின்மையும் தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தோன்றுவதற்கான காரணங்களாக முன் வைக்கப்பட்டன. தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தேவையெனும் கருத்து முன்வைக்கப்பட்டாலும், அவ்வியக்கத்தின் இலக்கு, போராட்ட வழி முறை, இயக்கப் பண்பு, ஸ்தாபன வடிவம் என்பவை பற்றி எதுவிதமான திட்டவட்டமான கருத்தும் முன் வைக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தேவையெனும் கருத்து 1975ம் ஆண்டு கடைசிப் பகுதியிலேயே முன்வைக்கப்பட்டது. 1975 செப்டம்பரில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா. லெ) யிலிருந்த தோழர்கள் யாழ்ப்பாணத்தில் கூடி தேசிய இனப் பிரச்சினை பற்றி ஆராய்ந்தனர். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட வேண்டுமெனவும், பிரிவினையை எதிர்ப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 'தனி நாட்டுக் கோரிக்கை அந்நிய நாடுகள் தலையிட வாய்ப்பளிக்கும்,' எனவே இக் கோரிக்கை பிற்போக்கானது எனும் கருத்து பிரிவினையை எதிர்ப்பதற்குக் காரணமாக முன் வைக்கப்பட்டது பிரிவினையா? இல்லையா? என்பதை விட்டு தேசிய ஒடுக்குமுறைக் கெதிராகப் போராடல் எனும் கோஷத்தை முன் வைத்தால் போது மானது எனும் கருத்து ஒரு சிலரால் முன் வைக்கப்பட்டாலும், பெரும்பான்மையோ ரின் முடிவான தேசிய ஒடுக்குமுறைக்கும், பிரிவினைக்கும் எதிராகப் போராடல் எனும் கருத்து முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்விதம் கூடி முடிவுகள் எடுக்கப்பட்டாலும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் எதுவுமிருக்க வில்லை. பெயருக்கு ஒரு சில கருத்தரங்குகள் மட்டும் நடத்தப்பட்டன. 1977 தேர்தலுக்கு அண்மித்த காலத்தில் சில தோழர்கள் தீர் மானித்து தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் சில உதிரியான நடவடிக்கை களைமேற்கொண்டனர். ஆங்காங்கே சிலகருத் தரங்குகள் நடத்தப்பட்டன; சில சுவரொட்டி கள் ஒட்டப்பட்டன; இத்துடன் அதன் முதற்கட்ட வேலை முடிவுற்றது. இக்கட்டத் தில் செய்யப்பட்ட வேலைகள் திட்டவட்ட மானதொரு வேலைத் திட்டமின்றி ஏதோ செய்ய வேண்டுமென்பதற்காக மனம்போன போன போக்கில் செய்யப்பட்டன. இதனைச் சிலர் இடது சாரிக் கட்சிகள் தொழிற் சங்கம் அமைக்கும் பாணியில் பார்த்தனர். இன்னு மும் சிலர் கட்சி நேரடியாக தமிழ் மக்களிடம் சென்றால் ஆட்களைப் பிடிக்க முடியாது. இம் முறையில் சென்றால் ஆட்களைப் பிடிப்பது இலகுவாக இருக்கும் எனச் சிந்தித்தனர் ஒரு சிலர் மட்டுமே இது காலத்தின் தேவை, அதாவது வரலாற்று ஓட்டத்தில் தமிழ் மக்கள் தனித்துப் போராட வேண்டிய நிர்ப் பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என் றுணர்ந்தனர். அப்படி உணர்ந்தபோதிலும் சரியானதொரு அரசியல் மார்க்கத்தை இவர் கள் முன் வைக்கவில்லை இதனால் இவர்களா லும் எதுவிதமான ஆக்கபூர்வமான பங்களிப் பையும் நல்க முடியவில்லை. 1977ம் ஆண்டு ஆகஸ்ட் இனக் கலவரத்தின் பின் தோழர் கார்த்திகேசன் மறைந்ததுடன் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் செயற்பாடுகள் யாவும் ஓய்விற்கு வந்தன.

இப்படிச் சில கால ஓய்விற்குப் பின்னர் ஏதோ ஒரு உந்துதல் மீண்டும் செயற்பட வேண்டுமென்று தள்ளியதால், 'தமிழ் மக்கள் ஜனநாயகமுன்னணி' அமைப்பைக்கட்டி வேலை களை முன்னெடுக்க வேண்டுமென 1979 முதல் பகுதியில் ஓர் அமைப்புக் கமிட்டி உருவாக்கப் பட்டது. அக்கமிட்டியும் முன்னையதைப் போன்று அமைப்புக்கான வேலையிலீடுபடாது பெயரை மட்டுமேகொண்ட, செயற்பாடற்ற கமிட்டியாக இருந்தது இக்கால கட்டத்தில் ஒரு சிலகருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும் இவை தொடர்ச்சி யாகவோ, சீராகவோ திட்டமிடப்பட்டோ செய்யப்படவில்லை. இவ்வேலைகளிலெல்லாம் அமைப்புப் பாங்கற்ற உதிரித்தன்மையே பெரும்பாலும் வெளிப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1979ல் வட பகுதியில் அவசர காலநிலைபிரகடனப்படுத்தப்பட்டுஇளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்கள்ஜனநாயகமுன்னணியை அமைப் பதற்கான அமைப்புக்கமிட்டி செயலிழந்தது. இந்நிலையில் சில தோழர்கள் தொடர்ந்தும் வேலை செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் முயற்சி செய்து 1979 செப்டம்பரில், ஏற்க னவே தொடர்புள்ள, செயற்பட விரும்பிய தோழர்கள் அனைவரையும்கல்முனையில் ஒன்று கூட்டி சில தீர்மானங்களை எடுத்தனர். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப்போராடும் தனித் துவமும், சுதந்திரமும் கொண்ட ஓர் அமைப் பாக தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி என் னும் பெயரில்தொடர்ந்து செயற்படவேண்டும் மெனத் தீர்மானிக்கப்பட்டது. முன்பே தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியெனும் பெயர் பாவிக்கப்பட்டாலும் 1979 செப்டம்பரில் தான் தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி அமைப்பாகப் பிரகடனப் படுத்தப்பட்டது மேலும் ஒரு மாநாடு கூட்டப்பட்டு தீர்மானிக் கப்படும் அரசியல் மார்க்கத்தின் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே வேலைகளை முன்னெடுப்பது எனவும், விரைவில் மாநாடு கூட்டப்பட வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே இருந்துவந்த செயற்திறனின்மை தொடர்ந்து களையப்படாமையினால் மாநாடு கூடுவதற்கு ஒருவருட காலதாமதம் ஏற்பட்டது.

1980 செப்டம்பரில்தான் 'தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி'யின் முதலாவது தேசிய மாநாடு கூட்டப்பட்டது இதுகூட ஒழுங்கான மாநாடுபோல் நடைபெறாமல் ஒருகதம்ப நிகழ்ச்சியாக நடைபெற்றது. டலவிடயங் களில் திட்டவட்டமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. தலைமை ஊழியர்களின் ஸ்திரமற்ற தன்மைகாரணமாகவும், தன்னம் பிக்கையின்மையாலும் விடயங்களைக்கருராக விவாதித்து முடிவுகளை எடுக்காமல் நழுவிச் செல்லும் போக்கே மேலோங்கியிருந்தது அத்துடன் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையே நாம் முன்னெடுப்ப தாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் எமது போராட்டமானது ஒரு ஆயுதம் தாங்கிய ாராட்டமெனவும் தீர்மானிக்கப்பட்டது ந்தபோதிலும் யுத்ததந்திரம் (மூலோபா யம்), நடைமுறைத்தந்திரம் என்பவை சரியாக வும், தெளிவாகவும் வகுக்கப்படாததுடன் தமி ழீழமா? இல்லையா?என்னும் கருத்திலும்திட்ட வட்டமான முடிவு இருக்கவில்லை. போராட் டம் வளர்ந்து செல்லும் சூழலைப் பொறுத்து இதுபற்றி தீர்மானிப்போம் எனும் கருத்தே மேலோங்கியிருந்தது. தமிழ்ப்பிரதேசத்தை விடுதலை செய்வது முழு இலங்கைப் புரட்சியின் ஒருபகுதியெனவும், அது சிங்களப் புரட்சி வாதிகளின் பின்னணிப் பிரதேசமாகப் பயன் படும் எனும் கருத்தும் முன் வைக்கப்பட்டன. மலையகமக்களின் பிரச்சினையும், எமது போராட்டத்தில் கெரில்லா நடவடிக்கை யின் பாத்திரம் என்பவை பற்றியும் எது விதமான முடிவும் எடுக்கப்படாமல் வெறும் விவாத மேடைப் பாங்கான விவாதங்களாக இருந்தனவேயன்றி ஆக்கபூர்வமாக முடிவுகள் எடுக்கப்படவில்லை.

இம்மகாநாட்டின் பின்னர் நாம் ஓரள வேனும் முன்னேக்கிச் செல்வோம் என எதிர் பார்த்தோம் ஆனால் எதிர்பார்த்தது போல் முன் செல்லாமையும், செயற் திறனின்மையும் அமைப்பின் தன்மைகளாயின. முதலாவது மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய கமிட்டியானது போர்க்குணமற்ற, செயற் திறனற்ற கமிட்டியாகவே இருந்தது மக்கள் போராட்டமெனவும் வெகுஜன அமைப் புக்களைக் கட்டவேண்டுமென்றும் அடிக்கடி சொல்லிக் கொண்டாலும் நடைமுறையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவு வெகுஜனப் போராட்டங்கள் எதனையுமே நடத்தவில்லை. இவ்வேளையில் எம்மை நாடிவந்த சக்திகள் பலவும் மீண்டும் விலகிச் சென்றன; அமைப் பில் தாராளவாதம் மேலோங்கியிருந்தது; இதனால் கட்டுக்கோப்பான ஸ்தாபனமாக இல்லாது வந்தோரை எல்லாம் வரவேற்கும் விருந்தினர் விடுதிபோல் அமைப்பு மாற்றம் பெற்றது மக்கள் அமைப்பு மற்றும் பல் வேறு சமூகப் பிரிவினரை அணி திரட்டல் எனக் கூறிக் கொண்டாலும், அமைப்பில் குட்டி பூர்ஷ்வாக்களும், புத்தி ஜீவிகளுமே இருந்தனர். அவர்களின் குணும்சங்கள் அமைப்பிலும் பிரதிபலித்தது. தலைமையி லிருந்த தன்னம்பிக்கையின்மையும், நெருக் கடிகளுக்குமுகம் கொடுக்கத் தயாரின்மையும் அமைப்பை முன் சொல்லவிடாமல் தடுத்தே வந்தன. இதனால் அமைப்பானது தொடர்ந் தும் சிறு குழுவாகவே இருந்தது. இருந்த அங்கத்தவர்களுக்குக்கூட ஒழுங்கு படுத்தப் பட்டு அரசியற் கல்வி சீராகக் கொடுக்கப்பட வில்லை. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சிகளி லிருந்து வெறும் சட்ட வரம்பிற்குள் மட்டும் செயலாற்றிப் பழகியதால் மாறும் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தலைமறைவு வேலைகளை முன்னெடுக்கத் தயாரின்மையால் பல முன் னணித் தோழர்கள்கூட பின்வாங்கினர்.

1980 செப்டம்பருக்கும், 1983 யூலைக்கும் இடைப்பட்ட மூன்றுவருட காலத்தில் ஆங் காங்கே சில கருத்தரங்குகள், சில கலந்துரை யாடல்கள், சில வகுப்புகள் என்பன மட்டும் நடாத்தப்பட்டன. அவை எதுவும் திட்ட மிடப்பட்டு ஒழுங்காகவும், தொடர்ச்சியாக வும் செய்யப்படவில்லை. மேலும் ஈழ மாண வர் பொதுமன்றம், தமிழீழ விடுதலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றுடனும் இணைந்து சில வெகுஜன நடவடிக்கைகளிலீடுபட்டாலும் அவைகூட குறிப்பிடத்தக்க அளவு பலனைத் தரவில்லை. ஏனெனில் இவை யாவும் உதிரியான நடவடிக்கைகளாக இருந்தனவேயன்றி அமைப்பைக்கட்டும் நோக்கில் செய்யப்படவில்லை. சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன; சில துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன; சில கலை கலாச்சார நடவடிக்கைகைகள் மேற்கொள்ளப்பட்டன; இவையெல்லாம் ஏதோ செய்யப்பட வேண்டுமென்பதற்காக செய்யப்பட்டனவேயன்றி அமைப்பு வடிவில் செய்யப்படவில்லை. மொத்தத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி பெயரளவில் இயக்கமாக இருந்ததேயன்றி அமைப்பு வடிவம் இருக்கவில்லை. சிறந்த அமைப்பாளர்களின்மையும் ஒரு காரணமாகும். இவ்வமைப்பாளர்கள் இல்லாத குறைபாடு தொடர்ந்து இருந்து வந்தது. மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்குப் பதில் நிகழ்ச்சிப் போக்கிலே அள்ளுப்பட்டு மக்களின் வால் பிடியாக சென்ற போக்கே இருந்தது.

1983 யூலைக் கலவரத்தின் தாக்கம் அமைப்பிலிருந்த சில தோழர்களை சிந்திக்கவைத்தது. இக்கலவரத்துடன் பலர் அமைப்பைவிட்டு ஒதுங்கினர். அமைப்பை முழுமையாகச் சீர் செய்ய வேண்டும்எனசிந்தித்த தோழர்களும், வெளியிலிருந்த தோழர்களும் சேர்ந்து அமைப்பை புனரமைத்துக் கொண்டனர். ஏற்கனவே பகிரங்கமான வேலைகளில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி ஈடுபட்டதாலும், சில பாதுகாப்பு நோக்கம் கருதியும், எமது நோக்கத்தைப் பிரதிபலிக்க வேண்டுமென்பதனாலும் எமது பெயரை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (National Liberation Front of Thamileelam) என மாற்றிக் கொண்டோம். 1983 செப்டம்பரில் நடந்த மாநாட்டில் எமது புதிய பெயரை வைத்ததுடன் எமக்கான அரசியற் கோட்பாட்டையும் வகுத்துக் கொண்டோம். செயற்திறனற்ற வெறும் வாய் வீச்சுக்காரர்களை அகற்றி புதிய தலைமையை உருவாக்கிக் கொண்டோம். நாம் யாவற்றையும் களைந்து முற்றிலும் புதியதை உருவாக்கிவிட்டோம் என்று சொல்ல முடியாது. அப்படி எதுவும் திடீரென மாற்றம் பெற்றுவிடாது. எமது வளர்ச்சியும்கூட இயங்கியல் விதிகளுக்குட்பட்டே அமையும். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியிலிருந்த குறைகள், எச்சசொச்சங்கள் இன்னும் எம்மிடையே உண்டு. அவற்றை எமது எதிர்கால வேலைகளினூடாகவே களைய முடியும். எம்மைச் சுய விமர்சனம் செய்யவும், எமது தவறுகளைக் களையவும் தயாராயுள்ளோம். தமிழ் மக்களுக்கு சுபீட்சமும் ஜனநாயகமும் கொண்ட அமைப்பான தமிழீழ மக்கள் குடியரசையமைக்கும் நோக்கில், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதை தனது இலட்சியமாக தமிழீழ தேசிய விடுதலை முன்னணி வகுத்துக் கொண்டது. இப்போராட்டத்தை நீண்டகால நோக்கிலமைந்த மக்கள் போராட்டமாக முன்னெடுக்கும் நோக்கில் ஒரு மக்கள் படையைக் கட்டும் பணியையும் செய்து வருகிறோம். அத்துடன் எமதுகடந்த கால அனுபவங்களான வெற்றிகள், தோல்விகள், முன்னேற்றங்கள், பின்னடைவுகள் என்பவற்றைத் தொகுத்து ஆய்வு செய்து எமது அரசியல் வழி முறையை வகுத்துக் கொண்டோம். எமது அனுபவங்கள் எல்லைக்குட்பட்டவை. நடைமுறையே தத்துவத்தின் உரை கல் என்பவற்றிற்கிணங்க மக்களிடையே வேலை செய்வதன் மூலமே எம்மை மேலும் செழுமைப் படுத்தவும், சீர் செய்யவும் முடியும். சரியான அரசியல் மார்க்கமும், எமது சொந்தப் பலமான மக்கள் சக்தி என்ற இரு ஆயுதங்களிலுமே முழு நம்பிக்கை கொண்டு நாம் செயற்பட்டு வருகிறோம். வெறும் ஆட்சி மாற்றத்திற்காக மட்டுமன்றி தமிழீழத்தில் வாழும் சகல தேச பக்த சமூகப் பிரிவினரதும் நல்வாழ்வை உத்தரவாதம் செய்யும் அரசை உருவாக்கும் போராட்டத்தை சளைக்காது உறுதியாக தமிழீழ தேசிய விடுதலை முன்னணி முன்னெடுக்கும்.

இதுவே எமது கடந்த காலம்!

இது எமது எதிர்காலத்திற்கு பாடமாக அமையட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப்புறத்துக் கிராமம்

—சேரனின் 'யமன்' என்ற கவிதைத்
தொகுதியிலிருந்து

அன்பான நகர்ப்புறத்துக் கொரில்லாவே!
என் வந்தனங்கள் உனக்கு

அடுத்த வெடிகுண்டுத் தாக்குதலுக்குத்
தயாராவதற்கு இடையில்
ரைஃபிளைத் துடைத்தல்,
வெடிமருந்தைச் சரிபார்த்தல்
திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்
களுக்கும்

மரண தண்டனை வழங்கல் என
உனக்கு நூறு வேலைகள்
இருக்கும்தான்.
என்றாலும்,
தயவு செய்;
மூன்று நிமிடம்தான்
சொல்வதைக் கேள் எனத்
தாழ்மையாய் வேண்டினேன் :

நமது நிலத்தின் எல்லைப் புறங்களில்
கொஞ்சக் காலம் திரிய நேர்ந்தது.
கிழக்கு மாகாணத்தில்,
அந்நியன் கணைக்கு எந்த நேரமும்
நொருங்கக் கூடிய
நீண்டதோர் எல்லை ; அனைவரும்
அறிவர்!

இருபது மைல்கள் காட்டினுள் நடக்கையில்
விட்டும் தொட்டும்
குளிர்ந்தும் கொதித்தும்
இடையிடை குறுக்கிடும்
அருவியில் குளித்து,
தரையிலே பூத்த தாமரைகளில்
வழி ஒதுங்கி,
சூரியனுக்கு நேர் கீழே இருக்கிறோம்
என்பதான பிரமையில்
நடந்தோம்
வழியில்
*'புலி பாய்ந்த கல்' என்ற இடம்
(பெயர் உனக்குப் பிடிக்கிறது இல்லையா?)
அதற்கு வலப்புறமாய்
போகிறது ஆறு;
அது போகட்டும் அப்புறமாய்
என்றபடி
நாங்கள் நடந்தோம் இப்புறமாக

எல்லைப்புறத்துக் கிராமம்.
மதுறு ஓயாவிற்கு இப்புறமாக
நமது நிலமும்
அப்புறமாக அவர்களின் நிலமும்
பச்சையாய் விரிந்தது.

ஆறு,
மணலென உறைந்துள்ள நாட்களில்
இப்புறமாக முயல்களை வேட்டையாட
அவர்கள் வருவாராம்.
உரத்த குரலில் எருமையை விரட்டும்
அவர்கள் குரலும் இங்கே கேட்குமாம்.

ஒருபுறம் காடு; யானைகள் திரியும்.
மறுபுறம் குன்றுகள்;
இடையிலே நீர்நிலை
தொலைவில் கூட்டமாய்,
அரசாங்கத்தால் அத்துமீறிக்
குடியேற்றப்பட்டோர் குடிசைகள்
தெரியும்!

கியூபாவில்தான் உள்ளனர் என்று
நீ சத்தியமாக நம்பியிருந்த
'உழவர்கள்'
இங்கும்கூட உள்ளனர் நண்பா!
நிலமும் நிலத்துடன் பிணைந்த மனிதனும்...
பத்திரிகைளை இவர்கள் அறியார்,
பாடசாலையை இவர்கள் அறியார்.
ரீ.வி. வீடியோ, மின்சார வசதிகள்
இலத்திரன் கருவிகள் எதுவுமே அறியார்...
இலங்கை அரசின் வானொலி தருகிற
செய்தியை மட்டுமே கேட்டுப் பழகி
உன்னைக்கூட,
'பயங்கரவாதி'யாய்த்தான்
இவர்கள் அறிவார்!
எப்படி இது?

காக்கி அணிந்த அரக்கர்கள் கையில்
வதைபடும் மக்களைக் காப்பதற்காக
துப்பாக்கி உயர்த்த யார்முன் வருகிறார்?
எல்லைப்புறங்களில் மக்களைக் காப்பது
யாருடைய பணி?

சுத்திச் சுத்திச் சுப்பற்றைக் கொல்லைக்குள்'
எத்தனை நாள் தான்
குண்டு வெடிப்பும்,கொரில்லாத் தாக்கும்?

'சும்மா போ நீமுட்டாள் கவிஞனே!
கேள்விகள் கேட்க இதுவா நேரம்...
என்று'
நின்று பதில் தரச் சிரமப் பட்டு
அடுத்த குண்டுத் தாக்குலுக்கு
ஓடுவாயனல்,
அதற்கடுத்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு
தயாராவதற்கு இடையில்
மறுபடி இதனை நான் சொல்ல நேரும்!
மக்களைப் பிரிந்த துப்பாக்கிகளுக்கு
அவை,
ஏ.கே.47 ஆயினும் கூட
ஏது அர்த்தம்?

'புலி பாய்ந்தகல்' எனும் இடம் கிரானிலிருந்து வடமுனைக்குச் செல்லும் வழியில் மதுறு ஓயாத் திட்டப் பகுதியிலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org